அட்டவணை 2.1.5 - அ : கோரிக்கை விடுக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட விடுதி வசதிகள்

விடுதி	கோரிக்கை விடுக்கப்பட்ட விடுதி வசதிகள்	1 ஆம் ஆண்டு மாணவர்கள்		இறுதியாண்டு (3 வது மற்றும் 4 வது) மாணவர்கள்			மொத்தம்
		CS பாடத் து றை	IS பாடத் துறை	CS பாடத் துறை	IS பாடத்துறை	SE பாடத்துறை	
ஆண் பிள்ளைகளுக் கான விடுதி	95	20	4	7	1	0	32
பெண் பிள்ளைகளுக் கான விடுதி	55	7	5	14	3	3	32
மொத்தம்	**150**	**27**	**9**	**21**	**4**	**3**	**64**

அட்டவணை 2.1.5 - ஆ : விடுதி வசதிக்காக செலவிடப்பட்ட தொகை

விடுதி	இயலளவு	12 மாதங்களுக் கான வாடகை(ரூ.)	பயன்பாட்டுச் செலவு(ரூ.)	முகாமைத்துவச் செலவு(ரூ.)	பதிவு செய்யப்பட்ட மாணவர்கள ின் எண்ணிக்கை க	ஒரு மாணவரு க்கான செலவு
ஆண் பிள்ளைகளுக் கான விடுதி	35	1,041,600.00	ஏனையவை : 25,104.00 நீர் : 117,368.81 மின்சாரம் : 43, 945.78 தொலைபேசி: - ரூ. 186,418.59	விடுதிப் பொறுப்பாளர் கொடுப்பனவு – 500*12 = 6000.00 உப விடுதிப் பொறுப்பாளர் கொடுப்பனவு – 750*12 = 9000.00 பொறுப்பாளரின் சம்பளம்: 386,140.70	32	**50,911.23**
பெண் பிள்ளைகளுக் கான விடுதி	32	720,000.00	ஏனையவை :60,945.75 நீர்: 139,908.72 மின்சாரம்:108,869.20 தொலைபேசி:5,067.25 ரூ. 314,790.92	உப விடுதிப் பொறுப்பாளர் கொடுப்பனவு – 750*12 = 9000.00 பொறுப்பாளரின் சம்பளம: 445,158.07	32	**46,529.66**
				மொத்தம்	**64**	**ரூ. 48,720**

(ஆ) உணவக வசதிகள்

ஏனைய பீடங்களின் உணவகங்கள் பகல் உணவு வேளையின்போது அதிக நெரிசலைக் கொண்டதாக இருப்பதுடன், அவை UCSC வளவுக்கு அண்மையில் அமைந்தில்லாதிருப்பதனால் மாணவர்களுக்கு உணவக வசதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. 2015 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட புதிய உணவகத்தில் உணவு தயாரிப்பதற்கான சமயலறை இல்லாமை காரணமாக செயற்பாடு சம்பந்தமாக பல்வேறு சிக்கல்கள் எழுந்தன. எனவே, பல்கலைக்கழக வளவினுள் அமைந்துள்ள ஏனைய உணவகங்களுடன் இணையான வகையிலான சேவையை வழங்க முடியுமான தரப்பொன்றுக்கு வழங்குவதற்கான விலைமனு கோருவதற்கு சிரமமாகவுள்ளது. இந்தப் இந்தப் பிரச்சினைக்கு தற்காலிகத் தீர்வாக பழைய தற்காலிக உணவகக் கட்டிடத்தின் சமயலறையை உணவுகளை சமைப்பதற்காக பெற்றுக்கொடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் புதிய உணவகத்துடன் இணைத்து நிரந்தர சமயலறையொன்றை நிர்மாணிப்பதற்கான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

UCSC இன் மாணவருக்கான உணவகம் பொதுவாக மு.ப.7.00 மணிக்கு திறக்கப்படுவதுடன், கற்கை அரையாண்டுகளில் பி.ப.6.00 மணி வரை திறந்து வைக்கப்படும். உணவகத்தின் முகாமையானது தரம் 1 சிரேஷ்ட விரிவுரையாளர், நிர்வாக ஆளணி மற்றும் மாணவர் பிரதிநிதிகளைக் கொண்ட உணவகக் குழுவொன்றினால் நிர்வகிக்கப்படுகின்றது. UCSC இன் உணவகத்தின் சேவையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுப்பதற்குப் போன்றே கலந்துரையாடலை மேற்கொள்வதற்காக குழுவானது உரிய காலங்களில் கூடியது. 2016 ஆம் ஆண்டில் உணவகக் குழுவின் அங்கத்தவர்கள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- கலாநிதி டீ.ஏ.எஸ் அத்துகோராள, பிரதிப் பணிப்பாளர்.
- கலாநிதி திருமதி எம்.டீ.ஜே.எஸ்.குணதிலக்க, தலைவர் / உள்வாரி ஆரம்ப பட்டதாரி மாணவர்கள்
- திரு.ஜீ.பீ.செனெவிரத்ன, ஆசிரியர் தொழிற் சங்கப் பிரதிநிதி.
- கலாநிதி டீ.டீ.கருணாரத்ன, இணைப்பாளர் /இலத்திரணியல்- கற்கை
- கலாநிதி திருமதி எஸ்.எம்.கே.டீ.அருணதிலக்க, மாணவர் ஆலோசகர்
- கலாநிதி திருமதி ரீ.ஏ.வீரசிங்க, மாணவர் ஆலோசகர்
- திரு.எல்பீ.ஜயசிங்க
- கே.எஸ்.குணதிலக்க, பொறியியலாளர்.
- திரு. கே.கே.கே.தர்மதிலக்க, பிரதிப் பதிவாளர்/UCSC
- திரு.ஈ.எம்.குணரத்ன, பிரதி நிதிப் பொறுப்பாளர் /UCSC
- திருமதி எம்.எம்.எம்.விஜயவர்தன, உதவிப் பதிவாளர்/ ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள்
- திருமதி எஸ்.எப்.இமாம், கல்விசாரா ஆளணிப் பிரதிநிதி
- திரு.டப்ளியூ.எல்.ஜீ.ஆர்.ரொசான் (2013/CS/104), மாணவர் பிரதிநிதி
- திரு. ஏ.ஏ.எப்.எம்.பஸ்லி (2014/CS/035), மாணவர் பிரதிநிதி
- திரு.சீ.எஸ்.சமரகே (2013/CS/107), மாணவர் பிரதிநிதி
- திரு.பீ.என்.தஹநாயக்க (2013/CS/018), மாணவர் பிரதிநிதி

உணவகத்திற்கான ஒப்பந்தம் முடிவடைந்தமையினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் 2016 ஒக்டோபர் மாதம் விலை மனுக் கோரப்பட்டது. திரு. எஸ்.அமரசிங்க என்பவர் மாணவர்களுக்கான உணவகத்தின் ஒப்பந்ததாரராக 2016 நவம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்.

சமயலறைக்குத் தேவையான மின்சாரம், நீர் மற்றும் உபகரணங்கள் UCSCஇனால் இலவசமாக வழங்கப்படுகின்றது. உணவக உரிமையாளர் அவருக்குரிய ஒப்பந்தக் காலப் பகுதியில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு கீழ் நடவடிக்கை மேற்கொள்வதனை எதிர்பார்க்கப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கான உணவகத்திற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக UCSC இனால் சுமார் **ரூ. 50,000.00** செலவு செய்யப்பட்டது.

பொதுவான நேரங்களில் மாணவர்களுக்கான உணவகம் நெரிசலாகக் காணப்படுவதனால் UCSC ஆளணியின் நலன்புரிச் சங்கத்தினால் சிறிய ஆளணியைக் கொண்ட உணவகமொன்று கட்டிடத்தின் மேல் மாடியில் நடாத்தப்பட்டு வருகின்றது. ஆளணியைச் சேர்ந்தவர்களுக்கு மற்றும் விருந்தினருக்கு மாத்திரம் இந்த உணவகத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், பகல் உணவை உண்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசமும் கட்டிடத்தின் மேல் மாடியில் அமைந்துள்ளது.

(இ) பட்டதாரி மாணவர்களுக்கான உள வள ஆலோசனை

மாணவர்களுக்கான உள வள ஆலோசனை என்பது பட்டதாரி மாணவர்களுக்காக UCSC இனால் இலவசமாக வழங்கப்படும் சேவையாகும். கடந்த ஒரு தசாப்த காலத்திற்குள் எமது அனுபவம் என்னவெனில் குடும்பப் பிரச்சினைகள், தொடர்புகள், கற்றல் மற்றும் தொழில்சார் தீர்மானங்கள் போன்ற வாழ்க்கையின் பல்வேறு நிகழ்வுகள் காரணமாக மாணவர்களின் மன அழுத்தம் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது என்பதாகும். தான் முகங்கொடுத்திருக்கும் விசேட உள ரீதியிலான சமூக பிரச்சினைகளின் மனோவியல் ரீதியிலான பிரச்சினைகளின் ஆரம்பக் கட்டத்தில் உதவி தேடும் மாணவர்களுக்கு பொருத்தமான சூழலை ஏற்படுத்திக்கொடுத்தல் UCSC ஆலோசனை சேவையின் நோக்கமாகும். எனினும் ஆலோசகர்கள், சில பிரச்சினைகளுக்கு மேலதிக உதவி தேவைப்படுமா என்பது சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்காக பயிற்றுவிக்கப்படுவதுடன், அவ்வாறு தேவைப்படுமாயின் அவ்வாறான மாணவர்கள் UCSC இற்கு வாராந்தம் வருகை தரும் தொழில் நிபுணத்துவ ஆலோசகர் ஒருவரிடம் முன்னிலைப்படுத்தப்படுவார்கள். மாணவர் ஆலோசனைக்காக 2016 ஆம் ஆண்டில் வேறான அறையொன்று ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் ஆலோசகர்களுடன் பரிமாறிக்கொள்ளும் தகவல்களின் இரகசியத்தை சிறப்பான வகையில் பாதுகாத்தல் இங்கு மிக முக்கிய விடயமாக இருப்பதுடன், நிபுணத்துவ ஆலோசகர்களிடம் அவற்றைக் கூறுவதாயின் மாணவர்களின் விருப்பத்தின் பிரகாரம் மாத்திரமே தெரிவிக்கப்படும். அத்துடன் குறிப்பிட்ட மாணவன் சம்பந்தப்படும் கற்கைப் பாடநெறி சம்பந்தமாக எந்தவொரு அழுத்தத்தின் காரணமாக UCSC இனால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயின் மாத்திரம் அதனுடன் தொடர்பான நிபுணத்துவ ஆலோசகர்கள் மீண்டும் UCSC உடன் தொடர்பு கொள்வார்கள். நிபுணத்துவ ஆலோசகர்கள் அந்த மாணவனுக்கு மேலதிக உதவி தேவைப்படுவதாக உறுதிப்படுத்தினால் அந்த மாணவர்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் சிகிச்சையளிக்கும் உளவியல் மருத்துவர் ஒருவரிடம் அந்த மாணவன் / மாணவி முன்னிலைப்படுத்தப்படுவார்கள்.

05 மாணவர்களுக்கான ஆலோசகர்கள் அதாவது, வைத்தியர் திருமதி எஸ்.எம்.கே.டீ.அருணதிலக்க, வைத்தியர் ரீ.ஏ.வீரசிங்க, திரு.எச்.ஈ.எம்.எச்.பீ.ஏக்கநாயக்க, திரு.ஜீ.பீ.செனெவிரத்ன மற்றும் வைத்தியர் ரீ.ஸ்ரீதரன் ஆகியோரின் சேவை அனைத்து மாணவர்களுக்காவும் பெற்றுக்கொடுக்கப்பட்டது. அத்துடன் உள வள ஆலோசனை தேவைப்படும் மாணவர்களின் வசதிக்காக நிபுணத்துவ ஆலோசகர்களின் சேவை வாரத்தில் 03 மணித்தியாலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. நிபுணத்துவ ஆலோசகர்களின் சேவைக்கு UCSC இனால் மணித்தியாலங்களின் அடிப்படையில் கட்டணம் செலுத்தப்பட்டது. சுமார் 20 - 30 மாணவர்கள் இந்த ஆலோசகர்களிடமிருந்து நிதமும் ஆலோசனை பெற்றுக்கொண்டதுடன், பரீட்சைகள் நடாத்தப்படும் காலங்களில் இந்த எண்ணிக்கை இரு மடங்காகியது.

(ஈ) பட்டதாரி மாணவர்களுக்கான நிதியுதவி

மஹபொல புலமைப் பரிசில், கல்விக்கான உதவு தொகை (bursary) மற்றும் மாணவர் நலனோம்புகை, இடர் நிதி போன்ற மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது.

மஹபொல புலமைப் பரிசில்

வர்த்தக மற்றும் வாணிப அமைச்சின் கீழ் காணப்படும் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையின் கீழ் 260 மாணவர்களுக்கு மஹபொல பலமைப் பரிசில் வழங்கப்பட்டது. திறமை மற்றும் சாதாரண புலமைப் பரிசில் தொகையின் பெறுமதி ரூபா 5,050 மற்றும் ரூபா 5,000 ஆகும்.

அட்டவணை 2.1.5 இ: மஹபொல புலமைப் பரிசில்

அனுமதித்துக் கொள்ளப்பட்ட ஆண்டு	கற்கை ஆண்டு	திறமை புலமைப் பரிசிலைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை (ரூ. 5050)	சாதாரண புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை (ரூ. 5000)	மொத்தம்
2014/15	1 ஆம் ஆண்டு	1(1+0)	72(43+29)	73 (43+30)
2013/14	2 ஆம் ஆண்டு	1(1+0)	86(61+25)	87 (62+25)
2012/13	3 ஆம் ஆண்டு	0(0+0)	79(68+11)	79 (68+11)
2011/12	4 ஆம் ஆண்டு	2(2+0)	19(12+7)	21 (14+7)
	மொத்தம்	4	156	260 (34%)

கல்விக்கான உதவு தொகை (Bursary)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கைகளுக்கமைய தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு கல்வி உதவு தொகை வழங்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் 51 மாணவர்களுக்கு இந்த உதவு தொகை வழங்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் இந்த உதவு தொகையைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.5 ஈ: மாணவர் உதவு தொகை புலமைப் பரிசில் - 2016

அனுமதித்துக் கொள்ளப்பட்ட ஆண்டு	கற்கை ஆண்டு	முழுமையான உதவு தொகையைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை(ரூ. 4000)	பகுதியளவு உதவு தொகையைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை(ரூ. 3900)	மொத்தம்
2014/15	1 ஆம் ஆண்டு	7(6+1)	9(7+2)	16 (13+3)
2013/14	2 ஆம் ஆண்டு	5(0+5)	9(2+7)	14 (2+12)
2012/13	3 ஆம் ஆண்டு	3(2+1)	12(7+5)	15 (9+6)
2011/12	4 ஆம் ஆண்டு	1(1+0)	5(2+3)	06 (3+3)
	மொத்தம்	16	35	51(7%)

கைத்தொழில் புலமைப் பரிசில்

சகல வருடங்களிலும் தேவைப்பாடுகளைக் கொண்ட மாணவர்களுக்காக புலமைப் பரிசில் அனுசரணையை வழங்குவதற்கு தனியார் அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. IFS R மற்றும் D தனியார் நிறுவனம் மாதமொன்றுக்கு ரூபா 2500.00 வீதம் 12 மாதங்களுக்கு 8 புலமைப் பரிசில்களுக்கு அனுசரணை வழங்கியது. நேர்முகப் பரீட்சையொன்றின் ஊடாக மாணவர்களைத் தெரிவு செய்துகொள்வதற்காக மாணவர் ஆலோசகர்கள் மற்றும் கற்கைப் பிரிவுத் தலைவர்கள் இதற்கு நேரடியாகத் தொடர்புகொள்கின்றனர்.

Shorea Robusta புலமைப் பரிசில்

2007 ஆம் ஆண்டில் கணனி முறைமை சிறப்பு பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின்போது பழைய மாணவர்களால் அறிமுகஞ் செய்யப்பட்ட "Shorea Robusta" எனும் விசேட புலமைப் பரிசிலொன்று நான்காம் ஆண்டின் ஆரம்பப் பட்டப்படிப்பு மாணவர்களுக்காக வழங்கப்படுகின்றது. இந்த முறையின் கீழ் இரண்டு புலமைப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன் அதன் பெறுமதி 10 மாத கால கற்கை ஆண்டுக்காக மாதமொன்றுக்கு ரூபா 2500/= வீதம் வழங்கப்படுகின்றது. மாணவர்களின் கற்கைச் செயற்திறன் மற்றும் நிதித் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு மேற்கொள்ளப்படும்

UCSC மாணவர் இடர் கடன் மற்றும் நலனோம்புகை நிதி

சில வருடங்களுக்கு முன்னர் UCSC கல்விசார் ஆளணியினால் பொருளாதாரக் கஷ்டங்களினால் பாதிப்புக்குட்பட்டிருக்கும் மாணவர்களுக்கு உதவி புரியுமுகமாக அவர்களது தேவைகள் தொடர்பில் கண்காணிக்கப்படுகின்றது. எனவே விஞ்ஞான முதுமாணி மற்றும் வெளிவாரிப் பட்டப் பாடநெறிகள் மூலமாக கிடைக்கப்பெறும் வருமானத்தில் 2% இனை மாணவர் இடர் மற்றும் நலனோம்புகை செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கு கல்விசார் ஆளணியினால் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிதியை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்படும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

2016 ஆம் ஆண்டில் 24 மாணவர்கள் (3%) மாணவர் நலனோம்புகை மற்றும் இடர் நிதியத்திலிருந்து புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொண்டனர். அவர்களிடையே 17 ரூ.5000/= புலமைப்பரிசில்களும், 07 ரூ. 3000/= புலமைப்பரிசில்களும் 05 மாதங்களுக்காக வழங்கப்பட்டது.

அட்டவணை 2.1.5 உ: விசேட நிதி உதவி

தெரிவுக்கான அளவுகோல்		ஆண்டில் நன்மையடைந்த மாணவர்களின் எண்ணிக்கை	செலுத்திய தொகை(ரூ.)
சர்வதேச வைபவங்களில் UCSC இனை பிரதிநிதித்துவப்படுத்தியமை	PES பல்கலைகழக சர்வதேச விளையாட்டு விழா, பியெஸ்டா 2016, பெங்களுர், இந்தியா	03	ஒரு மாணவனுக்காக 15,000.00
மாணவர்களின் பெற்றோரின் இறப்பின்போது	-	01	15,000.00

2.1.6 UCSC இன் மாணவர் அமைப்புக்கள்

2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனக் கட்டளைச் சட்டத்தின் உப உறுப்புரை 25 மற்றும் 26 இற்கமைய 2006 ஆம் ஆண்டிற்காக நடைபெற்ற வாக்கெடுப்பில் மாணவர் அமைப்புக்காக கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்கள் தெரிவானார்கள்.

சிரேஷ்ட பொருளாளர்: கலாநிதி எம்.ஜீ.என்.ஏ.எஸ்.பெர்னாந்து (சிரேஷ்ட விரிவுரையாளர், UCSC)

தலைவர்: டப்ளியூ.ஏ.ஆர்.ஆர்.சோமவீர
உப தலைவர்: கே.ஈ.ஜயதுங்க
செயலாளர் : எல்.எஸ்.குலதுங்க
கனிஷ்ட பொருளாளர் : டப்ளியு.ஜீ.எஸ்.மெண்டிஸ்
ஆசிரியர் : எஸ்.எம்.ஜீ.எல்.ஏ.சேனாதீர
அங்கத்தவர்கள் : எம்.விஷ்ணுராசன், எம்.எச்.ஏ.எல்.ருசான், ஜீ.ஏ.யூ.பீ.கே.விக்கிரமசிங்க, எச்.ஜீ.டீ.பிரியங்கர, ரீ.ரீ.பத்திரகே, எஸ்.யசோதரன், டீ.ஜீ.ரீ.டீ.தொலுவீர, டீ.ஆர்.என்.பெரேரா.

வேறு மாணவர் கழகங்கள் மற்றும் அமைப்புக்கள் காணப்பட்டபோதிலும் பல்வேறு மாணவர் செயற்பாடுகள் மாணவர் அமைப்பின் ஊடாகவே ஒருங்கிணைக்கப்படுகின்றது. இந்த சில செயற்பாடுகளுக்காக வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டதுடன் மாணவர்கள் அதனைப் பயன்படுத்தினர். பழைய மாணவர்கள், கைத்தொழில் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனுசரணைகள் ஊடாக கிடைத்த நிதிக்கு மேலதிகமாக அமைப்பின் நிதி நிலைமையை மேம்படுத்திக்கொள்வதற்காக மாணவர்கள் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டனர். மீண்டெழும் செலவுகளை அடிப்படையாகக் கொண்டு UCSC ஆனது அரசாங்க நிதியைப் போன்றே விஞ்ஞான முதுமாணி மற்றும் வெளிவாரி பட்டப் பாடநெறிகளின் ஊடாக ஈட்டிய வருமானத்தின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி அனைத்து மாணவர் செயற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டன.

2.1.7 மாணவர் செயற்பாடுகள்

முக்கியமாக கலாசார மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக மாணவர் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட மாணவர் செயற்பாடுகள்

அட்டவணை 2.1.7 அ: மாணவர் செயற்பாடுகள் - 2016

நிகழ்ச்சி	திகதி
சிங்கள - தமிழ் புத்தாண்டு விழா	ஏப்ரல் 24 ஆம் திகதி
பொசொன் பக்தி கீதங்கள்	ஜூன் 22 ஆம் திகதி
சமூக சேவைத் திட்டங்கள் (க.பொ.த (சா/த) மாணவர்களுக்காக)	செப். 23 ஆம் திகதி
பாயில் அமர்ந்து பாட்டுப்பாடல் (பெதுரு சாஜ்ஜே)	மே 13 ஆம் திகதி
இரத்த தான முகாம்	செப். 22 ஆம் திகதி
கலாசார விழா (வன்னி விழா 2016)	2016 ஒக். 28 ஆம் திகதி
புதியவர்களை வரவேற்றல்	ஒக். 15 ஆம் திகதி
மாணவர் / ஆசிரியர் விளையாட்டுத் தினம்	ஒக். 01 ஆம் திகதி
Reminisce 2016 – 2010/11 UCSC குழுவின் சுமுகமான ஒன்றுகூடல்	2016 ஒக். 01 ஆம் திகதி

UCSC IEEE மாணவர் கிளை

ரெயிட் சய்பர் வோர்ஸ் 2.0 - 5/12/2016
https://www.facebook.com/1538766439671163/photos/?tab=albumසහalbum_id=1731595177054954

IEEE திகதி 2016 - 10/4/2016
https://www.facebook.com/1538766439671163/photos/?tab=albumසහalbum_id=1790158564531948

IEE எக்ஸ்ட்ரீம் 10.0 - 10/22/2016
https://www.facebook.com/1538766439671163/photos/?tab=albumසහalbum_id=1797104467170691

UCSC ISACA மாணவர் அமைப்புக்கள்

iFest 2k16 - 5/29/2016
https://www.facebook.com/1538766439671163/photos/?tab=albumසහalbum_id=1737207813160357

iHack 2.0 - 10/8/2016
https://www.facebook.com/1538766439671163/photos/?tab=albumසහalbum_id=1793208234226981

ஆராய்ச்சி

10/8/2016, 10/8/2016
புத்தளம் கந்தேதொடுவ மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கு
https://www.facebook.com/733452900082031/photos/?tab=album மற்றும் album_id=1169729679787682

ஒட்டுக்குளம் கனிஷ்ட வித்தியாலயம் மற்றும் ஹலாம்பே கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கு 9/23/2016 - 9/25/2016
https://www.facebook.com/733452900082031/photos/?tab=albumසහalbum_id=1125415350885782

UCSC மொசில்லா சமூகம்

Foxeprenuer 2016 /பொக்ஸ் பிரீனியர் - 4/5/2016
https://www.facebook.com/1538766439671163/photos/?tab=albumසහalbum_id=1717330505148088

Localization Sprin/லொக்கலய்சேசன் ஸ்பிரிங் - 11/22/2016
https://www.facebook.com/1486981798224214/photos/?tab=albumසහalbum_id=1832921446963579

மேலும், பெஹெசர (UCSCஇன் மாணவர் ஊடக வட்டம்) ஊடாக புகைப்படவியலினால் மேற்குறிப்பிடாப்பட்ட நிகழ்வுகள் மேவுகை செய்யப்பட்டதுடன், மாணவர் கருத்து வட்டம் (students' blog) ஊடாக ஒவ்வொருவருடைய கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. (**http://ucsc.cmb.ac.lk/students/blog/**, **https://www.facebook.com/PahasaraUCSC/**).

2.1.8 மாணவர்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள் - இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

தனது அறிவு, ஆற்றல், மனப்பாங்கு மற்றும் மனவுறுதி என்பவற்றை விரிவுபடுத்திக்கொள்வதற்காக பல்வேறு இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்காக மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். அத்துடன் அந்தப் பங்கேற்பு ஊடாக UCSC இற்கு மற்றும் அதில் பயிலும் மாணவர்களுக்கு வெளியில் வரவேற்புக் கிடைக்கின்றது. 2016 ஆம் ஆண்டில் மாணவர்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.8 அ: 2016 ஆம் ஆண்டில் மாணவர்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள்

தொட.இல.	போட்டி	வெற்றி	அங்கத்தவர்கள்
1.	ஜனசக்தி புல் ஒப்சன் அப்பாதோன் சவால் போட்டி	<u>முதலாமிடம்</u> ரூ. 1,000,000.00 பணப் பரிசுடன் வெற்றிக் கிண்ணம்	**அணி – வயில் லூப்** டப்ளியூ.எம்.யூ.பீ.ஜயசிங்க (2014/CS/052) எஸ்.ஜீ.எச்.லியனகே (2014/CS/078) எஸ்.ஏ.கொடிதுவக்கு(2014/CS/066) கே.டப்ளியு.எஸ்.ஷனில்கா(2014/CS/137)
2.	நெட் கொம் போட்டி, மூன்றாம் பிரிவு, SLIIT கோட்பெஸ்ட்	<u>இரண்டாமிடம்</u> ரூ. 50,000.00 பணப் பரிசுடன் வெள்ளிக் கிண்ணம்	**அணி - டீம் - கொன்ப்-டீ** டீ.ஜே.என்.கொஸ்தா (2014/CS/013) கே.ரீ.பெத்தகே (2014/CS/009) டீ.எல்என்.கே.லியனகே(2014/CS/076) ஆர்.பீ.என்.தீமன்தா (2014/CS/020)
3.	SLIIT கோட்பெஸ்ட் - 2016 (மூன்றாவது ஹெகாதோன்)	<u>இரண்டாமிடம்</u>	**அணி – வொயிட்** ஓ.ஐ.முதன்நாயக்க (2015/CS/089) டீ.எம்.எஸ்.திசாநாயக்க (2015/CS/038) ஏ.பிரமோத்ய (2015/CS/002) எஸ்.டீ.செனெவிரத்ன (2015/CS/127)
4.	ஆசிரியர் இ- கற்பித்தல் திறந்த போட்டி	<u>முதலாமிடம்</u> (வெற்றிக் கிண்ணம்)	**அணி - ஹோஸ்** எஸ்.டீ.செனெவிரத்ன (2015/CS/127) டப்ளியு.என்.டீ.டீ.சஞ்சய (2015/CS/124) எச்.ஜீ.என்.சீ.சோமசிரி(2015/CS/132) ஏ.ஏ.எல்.என்.அதிகாரி(2015/CS/005) எல்.ஜீ.எச்.ரீ.குமார (2015/IS/037)

2.1.9 மாணவர்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள் - விளையாட்டு

உடற் கல்வித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்படும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக UCSC இனால் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். 2016 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட முக்கிய வெற்றிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

UCSC இன் கீழ் குறிப்பிடப்படும் மாணவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் குறிப்பிட்ட ஒவ்வொரு விளையாட்டுக்குமான விளையாட்டுத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.
கெரம் (பெண்) - ரீ.ஏ.கே.லோச்சனா, டய்கொண்டோ (ஆண்) - டப்ளியு.ஏ.எம்.எஸ்.வீரசூரிய, கராட்டே (ஆண்) - கே.டீ.பீ.சமரவீர

UCSC இன் கீழ் குறிப்பிடப்படும் மாணவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் குறிப்பிட்ட ஒவ்வொரு விளையாட்டுக்குமான விளையாட்டு உப தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.
கெரம் (பெண்) – எச்.எம்.எஸ்.பீ.கே.சந்திரசிரி, கெரம் (ஆண்) – பீ.வை.ஏ.குணரத்ன, பேஸ்போல் – ரீ.எஸ்.தஹநாயக்க, எல்லே (ஆண்) – ஜீ.ஏ.மதுசங்க, மேசைப் பந்து (ஆண) – ஈ.எம்.கே. டி சில்வா

2016 ஆம் ஆண்டு வெற்றிக் கிணத்தைப் பெற்ற மாணவர்கள்.
எம்.ஜீ.ஜயசேக்கர - பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தட களப் போட்டி

கீழ் குறிப்பிடப்படும் 36 UCSC மாணவர்கள் 2016 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக வர்ணத்தை வெற்றி கொண்டனர்.

பெட்மின்டன்:(ஆண்) வை.ரணவக்க, ஆர்.ஏ.எஸ்.வீ.ரணதுங்க **கூடைப்பந்து (பெண்)** ஜே.எம்.எஸ்.கே.ஜயவர்தன, **கெரம்(பெண்)** எஸ்.என்.விக்கிரமநாயக்க, **செஸ்:(ஆண்)** பீ.கே.யூ.எம்.ஜயசுந்தர, **செஸ்: (பெண்)** எஸ்.எஸ்.பீ.அபேவிக்கிரம, **கிரிக்கட்:** யூ.சீ.செந்தநாயக்க, டீ.பீ.டப்ளியு.ஜயசூரிய, **எல்லே (பெண்)** ஜீ.பீ.என்.கலப்பத்தி, **கால்பந்து:** எச்.எம்.எஸ்.அனுருத்த, என்.அங்கநாதன், ஓ.ரீ.எதிரிசிங்க, **ஹொக்கி (ஆண்)** : கே.எஸ்.எஸ்.ரணதுங்க, எஸ்.யசோதரன் **ஹொக்கி (பெண்)** : எம்.எம்.என்.டீ.சமிந்தி, ஆர்.ஏ.எஸ்.எஸ்.ரூபசிங்க, எம்.எஸ்.ரத்ன திவாக்கர, எஸ்.ஏ.டீ.வை.ஆர்.திசாநாயக்க **கராட்டே: (பெண்)** எஸ்.ஜீ.என்.டீ.மதுசங்க **கராட்டே: (பெண்)** கே.எம்.கே.பீ.ரணசிங்க, ஜீ.யூ.லியனகே **ரக்பி** எம்.எச்.ஆர்.என்.பீ.மதுரப்பெரும, எம்.யூ.கன்னங்கர, கே.ஜீ.எஸ்.மதுசங்க **நீச்சல் (பெண்)** டீ.ஜீ.டப்ளியு.ஜயசூரிய **மேசைப் பந்து (பெண்)** ஜீ.ஏ.டீ.சீ.கல்கமுவ **டய்கொண்டோ (பெண்)** என்.பீ.எல.ஆர்.பத்திரண, ஜீ.எம்.கமகே **டென்னிஸ் (பெண்)** எம்.எச்.எம்.ஹிசான், ரீ.சுசந்த் **தட களம் (பெண்)**. ஜீ.ஏ.யூ.பீ.கே.விக்கிரமசிங்க, ஜே.லோகீசன், ரீ.எம்.டீ.ஐ.தென்னகோன் **வொலிபோல்(பெண்)** எம்.எம்.பீ.தலகஹபிடிய

2.1.10 பட்டமளிப்பு வைபவம் 2016

கணனி முறைமை மற்றும் தகவல் முறைமை ஆகிய பாடத் துறைகளின் 5 பட்டப் பாடநெறிகளைச் சேர்ந்த 236 பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விழா 2016 ஆகஸ்ட் 16 ஆம் திகதி நடாத்தப்பட்டது. தகவல் முறைமையியல் மற்றும் கணனி தகவல் தொழில்நுட்பவியல் பாடநெறிகளின் மாணவர்கள் அவர்களது உயர் தரக் கல்விப் பாடத்துறையுடன் ஒப்பிட்டே மதிப்பீட்டுக்கு உட்படுத்துவார்கள். (3 ‘அ’ மற்றும் ‘ஆ’ அட்டவணை)

அட்டவணை 2.1.10 அ: UCSC பட்டதாரிகளின் இறுதியாண்டின் கற்கை செயற் திறன் - 2016

அனுமதி பெற்ற பாடநெறி	முதலாம் தரம்	மேல்	கீழ்	சித்தி	மொத்தம்	பதிவு செய்யப்பட்ட (தற்போதைய)	பதிவு செய்யப்பட்ட (மீண்டும் தோற்றும்)	பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை	சதவீதம் %
கணனி விஞ்ஞானமாணிப் பட்டம்	0	01	0	04	**05**	00	05	**05**	100
கணனி விஞ்ஞானமாணி - 3 வருடங்கள் 2011/2012 கற்கை ஆண்டு	0	0	12	88	**100**	109	00	**109**	91.7
கணனி விஞ்ஞானமாணி - 4 வருடங்கள் 2010/2011 கற்கை ஆண்டு	23	14	02	00	**39**	40	00	**40**	97.5
தகவல் முறைமை விஞ்ஞானமாணி 2011/2012 கற்கை ஆண்டு	0	0	10	60	**70**	81	00	**81**	86.4
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் விஞ்ஞானமாணி	09	11	0	0	**20**	20	00	**20**	100
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் விஞ்ஞானமாணி 2010/2011 கற்கை ஆண்டு	0	0	0	02	**02**	00	02	**02**	100
மொத்தம்	**32**	**26**	**24**	**154**	**236**	**250**	**07**	**257**	**91.8%**



உரு. 2.1.10 அ: UCSC பட்டதாரிகளின் மொத்த செயற் திறன் - 2016

அட்டவணை 2.1.10 ஆ: க.பொ.த. உயர் தர பாடத் துறையுடன் IS/BICT விஞ்ஞானமாணிப் பட்டதாரிகளின் செயற்திறன்

அனுமதி பெற்ற பாடநெறி	முதலாம் தரம்	மேல்	கீழ்	சித்தி	மொத்தம்
கணிதம்	0	0	0	0	**0**
விஞ்ஞானம்	0	0	1	4	**5**
வர்த்தகம்	0	0	3	22	**25**
கலை	0	0	6	34	**40**
BICT	**0**	**0**	**10**	**60**	**70**

அட்டவணை 2.1.10 இ: க.பொ.த. உயர் தர பாடத் துறையுடன் IS சிறப்பு /BICT விஞ்ஞானமாணிப் பட்டதாரிகளின் செயற்திறன்

அனுமதி பெற்ற பாடநெறி	முதலாம் தரம்	மேல்	கீழ்	சித்தி	மொத்தம்
கணிதம்	5	8	0	0	13
விஞ்ஞானம்	2	2	0	0	04
வர்த்தகம்	2	1	0	0	03
கலை	0	0	0	0	0
ICT விஞ்ஞானமாணி	**9**	**11**	**0**	**0**	**20**



உரு. 2.1.10 ஆ: க.பொ.த. உயர் தர பாடத் துறையுடன் IS/ICT முதல் தரப் பட்டம் மற்றும் IS / ICT சிறப்பு பட்டதாரிகளின் செயற்திறன்

2.1.11 ஆரம்ப (இளமாணி) பட்டதாரிகள் பெற்ற விருதுகள்

UCSC இன் அனைத்துப் பட்டப் பாடநெறிகளுக்குமான விருதுகள் வழங்கும் வைபவம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த விருதுகள் மற்றும் பிரிவுகளுக்காக முன்னர் அறிமுகஞ் செய்யப்பட்ட விருதுகள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் செனட் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2016 ஆம் ஆண்டு 16 ஆம் திகதி நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது வழங்கப்பட்ட விருதுகள் பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது. UCSC இன் அனைத்து கற்கைப் பாடநெறிகளுக்குமான திறந்த பேராசிரியர் வீ.கே.சமரநாயக்க விருதை வீ.ஏ.இசுரு (பதிவு இல. - 11020822) பெற்றுக் கொண்டார்.2016 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது கணனி விஞ்ஞானம் மற்றும் தகவல் முறைமை பாடத் துறையில் விருது பெற்றவர்கள் பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையின் ஊடாக விபரிக்கப்படுகின்றது.

அட்டவணை 2.1.11 அ: கணனி விஞ்ஞானம் பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விருதுகள் - 2016

விருதின் பெயர்	விருது பெற்றவரின் பெயர்
கணனி விஞ்ஞானத்திற்கான மொஹான் முனசிங்க விருது - 2015	திலகரத்ன கே.எம்.எஸ் (நுழைவு இலக்கம் : 11000155)
சிறந்த கணனி விஞ்ஞானம் இறுதியாண்டு செயற் திட்டத்திற்காக வழங்கப்படும் ICTA விருது - 2015	முத்துதந்திரிகே எஸ்.ஆர்.(நுழைவு இலக்கம்: 11000392) அமரசிங்க ஆர்.ஏ.(நுழைவு இலக்கம்: 11001925)
கைத்தொழில் சார்ந்த தரப்படுத்தலில் சிறந்த செயற் திறனுக்கான டேவிட் பீரிஸ் குழுமத்திற்கான தங்கப் பதக்கம் - 2014	
மூன்று வருட கால பட்டப்படிப்பின்போது சிறந்த செயற் திறனுக்கான வர்ச்சுஸா கற்கை சிறப்பு விருது - 2015	அமரசிங்க ஏ.எஸ். (நுழைவு இலக்கம்: 12000094)

அட்டவணை 2.1.11 ஆ: தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விருதுகள் - 2016

விருதின் பெயர்	விருது பெற்றவரின் பெயர்
நான்கு வருட கால பட்டப்படிப்பின்போது சிறந்த செயற் திறனுக்கான IFS கற்கை சிறப்பு விருது - 2015	தர்மதாச எம்.ஏ.ஐ.எம். (நுழைவு இலக்கம்: 11020156)
கைத்தொழில் சார்ந்த தரப்படுத்தலில் சிறந்த செயற் திறனுக்கான டேவிட் பீரிஸ் குழுமத்திற்கான தங்கப் பதக்கம் - 2014	தர்மதாச எம்.ஏ.ஐ.எம். (நுழைவு இலக்கம்: 11020156)
இறுதியாண்டின் சிறந்த செயற் திட்டத்திற்கான சம்பத் வங்கி விருது - 2015	ஜயசிங்க டீ.வீ.பீ.சீ.(நுழைவு இலக்கம்: 11020083) தர்மதாச எம்.ஏ.ஐ.எம். (நுழைவு இலக்கம்: 11020156) இசுரு வீ.ஏ. (நுழைவு இலக்கம்: 11020822)

அட்டவணை 2.1.11 இ: தகவல் முறைமை தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விருதுகள் - 2016

விருதின் பெயர்	விருது பெற்றவரின் பெயர்
மூன்று வருட கால பட்டப்படிப்பின்போது சிறந்த செயற் திறனுக்கான சீப்ரா டெக்னொலொஜீஸ் கற்கை சிறப்பு விருது - 2015	டயஸ் எஸ்.எச். (நுழைவு இலக்கம்: 12020145)

2.1.12 தொழில் முயற்சித் திறன்கள்

மூன்றாவது ஆண்டில் கைத்தொழில் சார்ந்த தரப்படுத்தலுக்கு முன்னர் அநேகமான அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு நிதிப் பங்களிப்பு ஒப்பந்தங்களின் கீழ் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளைக் காண முடியுமாக இருந்தது. பட்டதாரிகளின் தொழில் முயற்சித் திறன் சம்பந்தமான தகவல்களை பட்டமளிப்பு விழாவின்போது சிறிய கேள்விக் கொத்தொன்றின் மூலம் சேகரித்துக்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு கற்கைப் பாடநெறிகளுடன் தொடர்பாக UCSC பட்டதாரிகளின் தொழில் முயற்சித் திறன் சம்பந்தமான விபரம் கீழுள்ள அட்டவணையின் ஊடாக விபரிக்கப்படுகின்றது.

அட்டவணை 2.1.12 - அ: UCSCஇளமாணிப் பட்டதாரிகளின் தொழில் முயற்சித் திறன் - 2016

பாடநெறி	பட்டதாரிகளின் எண்ணிக்கை	இணக்கம் தெரிவிக்காதவர்களின் எண்ணிக்கை	தொழில் புரிபவர்கள்	தொழில் தேடுபவர்கள் / ஆர்வம் காட்டாதவர்கள்	தொழில் முயற்சி சதவீதம்
கணனி விஞ்ஞானமாணிப் பட்டம் (3 வருடங்கள்)	100	7	90	3	90%
கணனி விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 வருடங்கள்)	39	0	39	0	100%
தகவல் முறைமை விஞ்ஞானமாணிப் பட்டம் (3 வருடங்கள்)	70	3	53	14	76%
ICT பட்டம் (4 வருடங்கள்)	20	0	20	0	100%
மொத்தம்	**229**	**10**	**202**	**17**	**88%**



உரு. 2.1.12 - அ: UCSC இளமாணிப் பட்டதாரிகளின் தொழில் முயற்சித் திறன் - 2016

2.2. பட்டப்பின் கற்கைப் பாடநெறிகள்

2.2.1 விஞ்ஞான முதுமாணிப் பட்டப் பாடநெறி

2016 ஆம் ஆண்டில் விஞ்ஞான முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 05 முதுமாணிப் பட்டங்கள் வழங்கப்பட்டன. அவையாவன,

- **கணனி விஞ்ஞான முதுமாணிப் பட்டம்**

  கணனித் துறையில் இளமாணிப் பட்டங்களை கவனத்திற்கொண்டதன் பின்னர் பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதனால் கணனிப் பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமைகளைப் பெற்றுள்ளவர்கள் இந்தப் பட்டப்பின் பாட நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 2016 ஆம் ஆண்டில் இந்த முதுமாணிப் பட்டப் பாடநெறிக்கு 83 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். தேர்ந்தெடுப்பதற்கான எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின்போது மாணவர்கள் காண்பித்த ஆரம்பப் பட்டத் தகைமை, செயற் திறனுக்கமைய தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

- **தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான முதுமாணிப் பட்டம்**

  கணனித் துறையில் தமது தொழிலை மேற்கொள்வதற்கு விரும்பும் அல்லது கணனி முதுமாணிப் பட்டமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமானவர்களுக்கு இந்தப் பாடநெறி வழங்கப்பட்டுள்ளது. கணனித் துறையில் அனுபவத்தைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தில் இணைந்துகொள்வதற்கு ஊக்குவிக்கப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் இந்தப் பாடநெறிக்கு 74 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் ஊடாக தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

- **தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான முதுமாணிப் பட்டம் (இலத்திரனியல் - கற்கைகள்)**

தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான முதுமாணிப் பாடநெறியின் கீழ் தயாரிக்கப்பட்ட விசேட விஞ்ஞான முதுமாணிப் பட்டப் பாடநெறியாகும். கல்வி நடவடிக்கைகளுக்காக இ- கற்கை மற்றும் கணனித் தகவல் தொழில்நுட்பத் துறையினை விருத்தி செய்துகொள்வதற்கு தேவையாயின் அவ்வாறான மாணவர்களுக்கு இந்தப் பட்டப் பாடநெறியை தெரிவு செய்துகொள்ள முடியும். 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்துகொள்ளப்பட்வர்களின் எண்ணிக்கை போதாமை காரணமாக இந்ப் பாடநெறி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

- **தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான முதுமாணிப் பட்டம் (பல்லூடகங்கள்)**

தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான முதுமாணிப் பட்டத் திட்டத்தின் கீழ் விசேட பட்டப் பாடநெறியாக இதனைக் கருத முடியும். பல்லூடகவியல் சம்பந்தமாக ஆர்வம் காட்டும் மாணவர்களுக்கு இந்தப் பட்டப் பாடநெறியைத் தெரிவு செய்துகொள்ள முடியும். 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்துகொள்ளப்பட்வர்களின் எண்ணிக்கை போதாமை காரணமாக இந்ப் பாடநெறி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

- **தகவல் பாதுகாப்பு விஞ்ஞான முதுமாணிப் பட்டம்**

தகவல் பாதுகாப்புத் துறை சம்பந்தமான முதுமாணிப் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் கல்வியலாளர்களுக்காக இந்த முதுமாணிப் பட்டப் பாடநெறி தயாரிக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம், தகவல் முறைமை கணக்காய்வு மற்றும் தகவல் பாதுகாப்பு போன்ற துறைகளில் தொழில் புரிபவர்களுக்கு இந்தப் பட்டப் பாடநெறி ஊடாக இடைப்பட்ட அனுபவம் பெற்றுக்கொடுக்கப்படும்.

அனைத்து விஞ்ஞான முதுமாணிப் பட்டப் பாடநெறிகளும் நான்கு கற்கை அரையாண்டுகளைக் கொண்ட இரண்டு வருட பாடநெறிகளைக் கொண்டதாக இருப்பதுடன் தகவல் பாதுகாப்பு பாடநெறியுடன் தொடர்பான விரிவுரைகள் தவிர்ந்த ஏனைய விரிவுரைகள் வார இறுதியில் மாத்திரம் நடைபெறுகின்றது. பாடநெறிக்காக பதிவு செய்துகொள்பவர்கள் தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் முழு நேரமாக சேவையாற்றுபவர்களாக இருப்பதுடன், இந்தப் பாடநெறிக்குரிய பாடத் திட்டத்தின் அளவு மற்றும் விருதுகளின் எண்ணிக்கைக்கமைய அவை முழு நேரப் பாடநெறிக்கு சமமானதாகும். பாடநெறி வருடாந்தம் ஆரம்பிக்கப்படுவதனால் ஆண்டின் எந்தவொரு காலத்திலும் இரண்டு குழுக்கள் காணப்படும்.

ஒரு குழு முதலாவது ஆண்டுக்குரிய கற்கை நடவடிக்கைகளையும் இரண்டாவது குழு இரண்டாம் ஆண்டுக்குரிய கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

2015 / 2016 கற்கை ஆண்டின் பாடநெறிக்கான அனுமதி 2016 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் மேற்கொள்ளப்பட்டபோதிலும் 2015 ஆம் ஆண்டே மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பாடநெறிக்குரிய நேர அட்டவணை பாடநெறி ஆரம்பத்திலேயே வெளியிடப்பட்டதுடன், பாடநெறிக்கான உண்மையான கற்றல் சூழலை http://pgvle.ucsc.cmb.ac.lk ஊடாக கலப்புக் கற்றல் கலாசாரமொன்று மேம்படுத்தப்பட்டது. எனவே, வார நாட்களில் மாணவர்கள் UCSC வளவினுள் இல்லாதபோதிலும் அவர்களை துரிதமாக தொடர்பு கொள்வதற்கு முடியுமாக இருத்தல் தவிர நேருக்கு நேர் (f 2 f) விரிவுரைகளுக்கு முன்னர் மற்றும் பின்னர் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு முடியுமாகியது. 2016 ஆம் ஆண்டில் விஞ்ஞான முதுமாணி பாடநெறியுடன் தொடர்பான மாணவர் கையேடு 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதுடன் இணையத்தளத் தொகுதி UCSC இணையத்தளமான http://www.ucsc.cmb.ac.lk/pg. இல் காணப்படுகின்றது.

அட்டவணை 2.2.1 - அ : 2016 ஆம் ஆண்டில் முதுமாணிப் பட்டத்திற்கான அனுமதி

முதுமாணிப் பட்டப் பாடநெறி	2015/16 அனுமதி	1 ஆம் ஆண்டு மாணவர்கள்		2 ஆம் ஆண்டு மாணவர்கள்		மொத்தம்
		புதிய	மீண்டும் தோற்றிய	புதிய	மீண்டும் தோற்றிய	
கணனி விஞ்ஞான முதுமாணிப் பட்டம்	83	83	34	79	21	217
தகவல் தொழில்நுட்ப முதுமாணிப் பட்டம்	74	74	20	70	16	180
தகவல் பாதுகாப்பு முதுமாணிப் பட்டம்	27	27	04	26	00	57
மொத்தம்	**184**	**184**	**58**	**175**	**37**	**454**



உரு 2.2.1 - அ : 2016 ஆம் ஆண்டில் முதுமாணிப் பட்டத்திற்கான அனுமதி

UCSC ஈட்டும் பிரதான வருமானம் முதுமாணிக் கற்கைப் பாடநெறிப் பதிவுக்காக அறவிடப்படும் கட்டணமாகும். எனவே, பாடநெறியை உரிய காலத்தில் செயற்படுத்துவதற்கும் தரமான சேவையொன்றை வழங்குவதற்கும் கல்விசார் அளணியின் முனைப்பான பங்கேற்பினைப் போன்றே பங்களிப்பும் இங்கு மிக முக்கியமாகும். சில தனியார் நிறுவனங்களும் இதற்கு சமமான முதுமாணிப் பட்டப் பாடநெறிகளை ஆரம்பித்துள்ளன. அந்த நிறுவனங்களினால் வளவாளர்களுக்கு அதிக தொகையைச் செலுத்துவதன் காரணமாக UCSC முதுமாணிப் பாடநெறித் திட்டத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, வளவாளர்களுக்காக நிலவும் வர்த்தகப் பெறுமதி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு காண்பிக்கும் பங்களிப்பு, ஆளணிக்கான பயிற்சி மற்றும் நலனோம்புகை மற்றும் நிறுவனத்தின் முன்னேற்றம் போன்ற

விடயங்களைக் கவனத்திற்கொண்டு இத் திட்டம் மற்றும் UCSC இன் செயற்பாடுகளுக்காக கல்விசார் ஆளணியை ஊக்குவிப்பதற்காக இத் திட்டத்தின் வரவு செலவு மேம்படுத்தப்பட்டது. பல்கலைக்கழக முறைமையில் தற்போதைய அலுவல் விதிமுறைகளுக்கமைய முதுமாணிப் பட்டத் திட்டத்தில் பங்குபற்றுதல் கல்விசார் ஆளணி மேற்கொள்ள வேண்டிய கட்டாய அலுவல் இல்லை.

அட்டவணை 2.2.1 - ஆ: முதுமாணிப் பாடநெறிக்காக ஆளணியின் நேரடிப் பங்களிப்பு

முதுமாணிப் பட்டப் பாடநெறி	கல்விசார்			மேற்பார்வை		நிர்வாகம்	கல்விசாரா
	UCSC	வெளிவாரி (உள்நாடு)	வெளிவாரி (வெளிநாடு)	UCSC	வெளிவாரி		
கணனி விஞ்ஞான முதுமாணிப் பட்டம்	33	04	-	11	1	02 (ஆய்வு/ முதுமாணி)	04
தகவல் தொழில்நுட்ப முதுமாணிப் பட்டம்		04	-	16	1		
தகவல் பாதுகாப்பு முதுமாணிப் பட்டம்		04	03	05	-		
மொத்தம்	**33**	**12**	**03**	**32**	**02**	**02**	**04**

கல்விசார் ஆளணிக்கு முதுமாணிப் பட்டப் பாடநெறிக்காக நேரடி செலுத்துகை மேற்கொள்ளப்படாவிட்டாலும் அந்தப் பாடநெறியை நடாத்துதல் மற்றும் முகாமைப்படுத்துவதற்காக ஆளணியைச் சேர்ந்த அனைவரும் இதில் பங்குபற்றுவதாகக் குறிப்பிடுதல் முக்கியமாகும். எனவே வருமானத்தில் 2%இனை ஆளணியின் நலனோம்புகை மற்றும் பொதுவான பயிற்சி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

2.2.1.1 விஞ்ஞான முதுமாணிப் பட்டமளிப்பு நிகழ்ச்சித் திட்டம்

2012/13 கற்கை ஆண்டிற்காக பதிவு செய்துகொள்ளப்பட்டவர்கள் முதுமாணிப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். அது தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. மீண்டும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் சிலரும் (26%) பட்டத்தைப் பெற்றுக் கொண்டனர்

அட்டவணை 2.2.1.1 - அ : 2016 ஆம் ஆண்டின் பட்டமளிப்பு வைபவம் தொடர்பான பகுப்பாய்வு

பாடநெறி	2012/13 அனுமதி	பட்டம் பெற்றோர்				மொத்தம்	% (முதற் தடவை)
		2012/13	2011/12	2010/11	முன்னைய		
கணனி விஞ்ஞான முதுமாணிப் பட்டம்	81	25	06	02	00	33	31%
தகவல் தொழில்நுட்ப முதுமாணிப் பட்டம்	100	55	03	03	00	61	55%
தகவல் பாதுகாப்பு முதுமாணிப் பட்டம்	26	13	02	02	00	17	50%
கணனி விஞ்ஞானப் பட்டப்பின் டிப்ளோமா	00	01	02	02	01	06	--
தகவல் தொழில்நுட்பப் பட்டப்பின் டிப்ளோமா	00	00	01	05	01	07	--
தகவல் பாதுகாப்பு பட்டப்பின் டிப்ளோமா	00	00	01	02	00	03	--
மொத்தம்	**207**	**94**	**15**	**16**	**2**	**127**	**45%**



உரு. 2.2.1.1 -அ : 2016 ஆம் ஆண்டின் பட்டமளிப்பு வைபவம்

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 மற்றும் 07 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட பட்டப்பின் படிப்பு பட்டமளிப்பு வைபவத்தின்போது சில பட்டதாரிகள் பாடநெறியில் அவர்கள் காட்டிய திறமைகளை அடிப்படையாகக்கொண்டு விசேட விருதுகளைப் பெற்றுக் கொண்டார்கள். அது தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2.1.1 - ஆ : முதுமாணிப் பட்டமளிப்பு வைபவம் - 2016

விருதின்/பதக்கத்தின் பெயர்	விருது /பதக்கம் பெற்றவர்
கணனி விஞ்ஞான முதுமாணிப் பட்டப் பாடநெறியின் சிறந்த மாணவருக்கான கிங்ஸ்லேக் விருது	திரு.வீ.எல்.குணவர்தன 2013/MCS/024 (13440242)
தகவல் தொழில்நுட்ப முதுமாணிப் பட்டப் பாடநெறியின் சிறந்த மாணவருக்கான JICA விருது	திருமதி பீ.எச்.ஜீ.பெரேரா 2013/MIT/061 (13550619)
MIS விருது	எம்.ஆர்.சீ.எஸ்.முத்துதந்ரீ 2013/MIS/017 (13770175)

2.2.1.2 விஞ்ஞான முதுமாணிப் பட்டப் பாடநெறித் திட்டத்தின் அபிவிருத்தி

கடந்த சில வருடங்களில் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் மற்றும் இலங்கை தர நிர்ணய அளவுகோல்களுடன் முதுமாணிப் பட்டப் பாடநெறிகளையும் இணைப்பதற்கான தேவையை கவனத்திற் கொண்டு 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து முதுமாணிப் பட்டப் பாடநெறிகளினதும் கற்கை நடவடிக்கைகள் மற்றும் பாடத் திட்டங்களை மறுசீரமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதனால், முதுமாணிப் பட்டப் பாடநெறியை நடாத்துவதற்கு மேலதிகமாக பாடத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், மறுசீரமைத்தல் மற்றும் மேம்படுத்துவதுடன் தொடர்பான பல செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
பாடத் திட்டங்களை மறுசீரமைத்தல், கற்கை நடவடிக்கைகள் மற்றும் பாடத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும்இடைக்காலச் சட்டத்தை உருவாக்குதல் சம்பந்தமான விபரம்.

- 2016 செப்டெம்பர் 12 ஆம் திகதி - 2017 ஆம் ஆண்டின் முதுமாணிப் பாடநெறியில் இணைத்துக் கொள்வதற்காக இடைக் காலச் சட்டம் மற்றும் விதிமுறைகள் உருவாக்கத்திற்கான ஒரு நாள் செயலமர்வு.
- 2016 டிசம்பர் 2 ஆம் திகதி - முதுமாணிப் பாடநெறியின் பாடத்திட்டங்கள் அபிவிருத்தி சம்பந்தமான முதலாவது செயலமர்வு

2.2.2 ஆராய்ச்சிப் பட்டங்கள் - தத்துவமாணி மற்றும் கலாநிதிப் பட்டம் (M. phil. & Phd)

தத்துவவியல் முதுமாணி மற்றும் கலாநிதி கணனி ஆராய்ச்சி பட்டம் எனும் பெயரில் இரண்டு ஆராய்ச்சிப் பட்டங்கள் UCSC இனால் வழங்கப்படுகின்றது. வருடம் பூராவும் அவற்றுக்காக பதிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பு நிலவுவதுடன் UCSC இன் சிரேஷ்ட கல்விசார் ஆளணியின் ஆராய்ச்சித் துறை /குழு / தேவையுடன் தமது ஆராய்ச்சித் தேவை மற்றும் பொருத்தப்பாடு காணப்படும் மேற்பார்வையாளர் ஒருவரை இனங்கண்டு கொள்வதற்குததகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் ஊக்குவிக்கப்படுவார்கள். UCSC இல் 30 சிரேஷ்ட விரிவுரையாளர்களைக் கொண்ட குழாமொன்று காணப்படுவதுடன், அவர்களில் 25 பேர் கணனி தொடர்பான கலாநிதிப் பட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளபோதிலும் ஆராய்ச்சிப் பட்டத்தை பூர்த்தி செய்துள்ள சதவீதம் மிகவும் பலவீனமான நிலைமையிலேயே காணப்படுகின்றது.இந்த நிலைமையை மிகவும் பாரிய விடயமாகக் கருதி ஆராய்ச்சிப் பட்டத்துடன் தொடர்புடைய சிக்கல்களை பகுப்பாய்வுக்குப் போன்றே 2016/2017 ஆண்டில் இந்த சிக்கல்களில் சிலவற்றைத் தீர்ப்பதற்காக வெளிவாரியான பேராசிரியர் ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அவுஸ்திரேலியா தேசிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சமன் ஹல்கமுகே அவர்கள் 2016 ஆம் ஆண்டில் வெளிவாரியான விரிவுரையாளராக நியமிக்கப்பட்டதுடன், சிக்கல்களை பகுப்பாய்வுக்குட்படுத்தி உரிய பரிந்துரைகளைப் பெற்றுத் தருமாறு வேண்டிக்கொள்ளப்பட்டது. ஆராய்ச்சிப் பட்டத்தின் மேற்பார்வையில் நிலவும் சவால்களை இனங்கண்டு கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் ஜூலை மாதத்தில் அவர் நுண்ணறிவு தொடர்பான அமர்வொன்றை நடாத்தினார்.

ஆராய்ச்சிப் பட்டத்திற்காக பதிவு செய்தல் மற்றும் பட்டத்தைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. UCSCஇன் சில ஆராய்ச்சித்துறை மாணவர்கள் குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (Queensland University of Technology (QUT)) மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கிடையிலான ஒன்றிணைந்த பட்டப் பாடநெறித் திட்டத்துடன் இணைந்து கொண்டனர். 2016 ஆம் ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கான விஜயத்தை மேற்கொள்வதற்காக அவர்களுக்கு பகுதியளவில் செலுத்துகை மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை 2.2.2 - அ : ஆராய்ச்சிப் பட்டத்திற்கு பதிவு செய்தல் மற்றும் நிறைவு செய்தல்

ஆராய்ச்சிப் பட்டம்	1 ஆம் ஆண்டு (2016 பதிவு)	2 ஆம் ஆண்டு (2015 பதிவு)	3 ஆம் ஆண்டு (2104 பதிவு)	நீடித்தல் அடிப்படையில் (2014 இற்கு முன்னர் பதிவு செய்த)	மொத்தம்	2106 ஆம் ஆண்டின் பட்டதாரிகள்
தத்துவ முதுமாணி						00
முழு நேர	01	01	02	00	04	
பகுதி நேர	00	00	00	02	02	
மொத்தம்	**01**	**01**	**02**	**02**	**06**	
செயலிழந்த மாணவர்கள்*	01	01	01	02	05	
கலாநிதி						01
முழு நேர	03	02	03	05	13	
பகுதி நேர	04	05	04	10	23	
மொத்தம்	**07**	**07**	**07**	**15**	**36**	
செயலிழந்த மாணவர்கள்*	07	05	03	11	26	
மொத்த ஆராய்ச்சிப் பட்டங்களின் எண்ணிக்கை	**08**	**08**	**09**	**17**	**42**	**01**

* செயலிழந்த மாணவர்கள் என்றால் 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது முன்னேற்ற அறிக்கைகளை ஒப்படைக்காத மற்றும் பதிவை புதுப்பித்துக்கொள்ளாத மாணவர்களாவர்.



உரு. 2.2.2 - அ : ஆராய்ச்சிப் பட்டத்திற்கான மாணவர் பதிவு மற்றும் பதிவை புதுப்பித்தல் - 2016

ஆராய்ச்சிப் பட்டங்களுடன் தொடர்பான முதுமாணிப் பட்டமளிப்பு வைபவம் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. 2016 ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தை ஒரு மாணவர் மாத்திரமே பெற்றுக் கொண்டார்.

2.3 வெளிவாரிப் பட்டம் மற்றும் தொடர் கல்விப் பாடநெறிகள்

2.3.1 தகவல் தொழில்நுட்பவியல் (வெளிவாரி) பட்டப் பாடநெறி

2000 ஆம் ஆண்டில் UCSC தகவல் தொழில்நுட்பவியல் வெளிவாரிப் பட்டப் பாடநெறியை (BIT) [www.bit.lk] ஆரம்பித்ததுடன், அதன் 16 ஆவது குழுவை 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்து கொண்டுள்ளது. கொழும்பு 03 நகர மண்டபத்தில் தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள வெளிவாரிப் பட்டக் கற்கை நிலையத்தின் ஊடாக வெளிவாரிப் பட்டத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் அந்த இடத்திற்கான குத்தகை காலம் முடிவடைந்ததன் பின்னர் இந்த நிலையத்தை வேறு இடமொன்றுக்கு கொண்டு செல்லுமாறு உரிமையாளர் தெரிவித்தார். திறந்த வர்த்தக விளம்பரமொன்றின் மூலம் கிருளப்பனையில் பொருத்தமான இடமொன்றை தெரிவு செய்துகொள்வதற்கு முடியுமானபோதிலும் இறுதித் தறுவாயில் அந்த இடத்தின் உரிமையாளர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதனை நிராகரித்து விட்டார். இதனால் இந்தப் பாடநெறியை முகாமைப்படுத்துதல் தொடர்பாக UCSC பாரிய சிரமத்திற்கு முகங்கொடுத்ததுடன், அனைத்து பொருட்கள், உபகரணங்கள் உட்பட மொத்த ஆளணியையும் UCSC இல் சில அறைகளுக்கு தற்காலிகமாகக் கொண்டுசெல்லப்பட்டது. பின்னர் புதியதொரு வர்த்தக விளம்பரத்தின் மூலம் 2016 மார்ச் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு 06 சுவர்ண மாவத்தையில் இலக்கம் 17 இல் அமைந்துள்ள கட்டிடத்தில் (ஹெவ்லொக் நகருக்கு நேரெதிர் பகுதி) வெளிவாரிப் பட்டப் படிப்பு நிலையம் UCSC ஊடாக மீள அமைக்கப்பட்டது. இந்த நிர்வாக ரீதியிலான பிரச்சினை பாடநெறியின் முகாமைத்துவம் மீது சாதகமற்ற விதத்தில் பாதிப்புச் செலுத்தியது.

கடந்த காலங்களில் BIT பாடநெறி மாத்திரம் 35,639 மாணவர்களை ஈர்த்துக்கொண்டதுடன் அதனூடாக 1,923 பட்டதாரிகளும் 3,354 உயர் டிப்ளோமாதாரிகளும் 6,952 டிப்ளோமாதாரிகளும் 2015 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது வெளியாகினர். 2015/16 (2016 ஆம் ஆண்டுக் குழு) கற்கை ஆண்டிற்காக புதிதாக 2,188 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், புதிய அனுமதி நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நடைபெற்றது. அது 2015 ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும் அனுமதி பெற முடியுமான வகையில் 2016 ஆண்டு ஜனவரி / பெப்ரவரி வரை அவகாசம் வழங்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் பதிவு செய்து கொண்ட மாணவர்கள் பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.3.1 - அ : BIT பாடநெறிக்காக மாணவர் பதிவு - 2016

பாடநெறி	மொத்த தேர்வுநாடிகளின் எண்ணிக்கை	புதிய பதிவுகள்	பதிவை புதுப்பித்தல்	மொத்தம்	2016
முதலாம் ஆண்டிற்கான பதிவு	2,059	1,602	586	2,188	4,075
இரண்டாம் ஆண்டிற்கான பதிவு	--	490	756	1,246	2,509
மூன்றாம் ஆண்டிற்கான பதிவு	--	242	935	1,177	1,651
மொத்தம்	**2,059**	**2,334**	**2,277**	**4,611**	**8,235**

உரு 2.3.1 - அ : BIT இற்கான மாணவர் பதிவு - 2016

2.3.1.1 மாணவர் செயற் திறன் - 2016

கடந்த 4 வருட காலத்திற்குள் பதிவு செய்யப்பட்ட மற்றும் பட்டதாரி BIT மாணவர்களின் செயற் திறன் இலக்குடன் ஒப்பீட்டு அடிப்படையில் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.3.1.1 - அ : கடந்த மூன்று வருட காலத்தினுள் வெளிவாரிப் பட்டம் தொடர்பான செயற் திறன்

ஆரம்பப் பட்டத்திற்கான வெளிவாரித் தேர்வுநாடிகள்	KPI	2012/13	2013/14	2014/15	2015/16
DIT - புதிய அனுமதி	**2000**	2034	2379	1890	1602
DIT – பதிவு செய்யப்பட்ட	4000	4175	4535	4075	2188
DIT – டிப்ளோமா	**600**	611	515	379	403
[DIT/பதிவு]%	**15%**	**15%**	**11%**	**9%**	**18%**
HDIT - உயர் டிப்ளோமாவுக்கான அனுமதி	**600**	714	721	690	490
HDIT - உயர் டிப்ளோமாவுக்கான அனுமதி	2000	2391	2583	2509	756

HDIT - உயர் டிப்ளோமா	**300**	305	339	227	149
[HDIT/ பதிவு]%	**15%**	**13%**	**13%**	**9%**	**20%**
BIT - பட்டத்திற்கான அனுமதி	**300**	312	347	346	242
BIT - பட்டத்திற்கான பதிவு	1500	1416	1537	1651	1177
BIT – பட்டதாரிகள்	**200**	194	225	262	204
[BIT/ பதிவு]%	**13%**	**14%**	**15%**	**16%**	**17%**



உரு. 2.3.1.1 - அ : கடந்த மூன்று வருட காலத்தினுள் வெளிவாரிப் பட்டத்திற்கு பதிவு செய்தல்

2.3.1.2 BIT கற்பித்தல் நிறுவகம்

UCSC நேரடியாக கற்பித்தல் நடவடிக்கைகளுடன் தொடர்பு படாதிருப்பதனால் அரச - தனியார்ஒத்துழைப்பு என்ற ரீதியில் BIT நடாத்தப்பட்டு வந்தது. எனவே சகல BIT கற்பித்தல் நிறுவகங்களில் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி கூட்டமொன்று நடாத்தப்பட்டதுடன், அங்கு பாடத் திட்டத்தை சுருக்கமான வகையில் அறிமுகஞ் செய்தலும் நிறுவகத்தின் பின்னூட்டலைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் BIT தேர்வுநாடிகளுக்காக அநேகமான பயிற்சி நிறுவகங்கள் நேருக்கு நேர் கலந்துரையாடல் ரீதியிலான வகுப்புக்களை நடாத்தி கற்றல் உதவிகளை வழங்கப்பட்டன. அந்த நிறுவகங்களுக்காக UCSC அதிகாரம் ஒப்படைக்கப்படாதபோதிலும் பாடநெறியின் வெற்றி தொடர்பாக வழங்கப்பட்ட பங்களிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. சகல ஆண்டுகளிலும் UCSC ஒவ்வொரு நிறுவகங்களினதும் பரீட்சைப் பெறுபேறுகளின் பொழிப்பை வெளியிடுகின்றது. அதனூடாக தேர்வுநாடிகளுக்கு தமது கற்றல் நடவடிக்கைகளுக்காக காணப்படும் நிறுவகங்கள் மற்றும் திட்டங்களை தயாரித்துக்கொள்ள முடியுமாக இருக்கும். தேர்வுநாடிகளின் அரைவாசிக்கும் அதிகளவு எண்ணிக்கையானோர் VLE மற்றும் இணைய வழியிலான / பரிந்துரை செய்யப்பட்ட கற்றல் உபகரணங்களின் உதவியுடன் கற்கின்றனர். 2015/16 இல் 12 மாவட்டங்களில் அமைந்துள்ள 31 நிறுவகங்கள் 5 அல்லது அதனிலும் அதிகளவிலான எண்ணிக்கையானோருக்கு பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதனிடையே 14 நிறுவகங்கள் 3 ஆண்டுகளுக்கும் செயற்படுவதுடன் அது தொடர்பான விபரங்களை BIT (www.bit.lk) இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும். BIT பரீட்சைகள் கொழும்பு, கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற நிலையங்களில் நடைபெறுகின்றன.

2.3.1.3 BIT வெளிவாரிப் பட்டம் மற்றும் டிப்ளோமா பட்டமளிப்பு வைபவம்

BIT வெளிவாரிப் பட்டமளிப்பு வைபவம் 2016 செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2015 ஆம் ஆண்டின் பட்டதாரிகளுக்கும் அந்த ஆண்டில் உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள டிப்ளோமா மாணவர்களுக்கான பட்டமளிப்பு வைபவம் ஆகஸ்ட் 24 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய கலையரங்கத்தில் நடாத்தப்பட்டது. விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டமளிப்பு வைபவத்தின்போது 262 பட்டதாரிகளுக்கு பட்டமளிக்கப்பட்டது. பெற்றோர் மற்றும் BIT கற்பித்தல் நிலையங்களின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

அட்டவணை 2.3.1.3 - அ : 2015 /16 வெளிவாரிப் பாடநெறியின் செயற் திறன்

பாடநெறி	புதிய பதிவுகள்	மீண்டும் தோற்றிய	மொத்தம்	பட்டதாரிகளின் எண்ணிக்கை
தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா	1602	586	2,188	379
IT உயர் டிப்ளோமா	490	756	1,246	227
தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி	242	935	1,177	262
மொத்தம்	**2,334**	**2,277**	**4,611**	**868**



உரு. 2.3.1.3 - அ : 2016 ஆம் ஆண்டில் பட்டப் பாடநெறிக்கான பதிவு மற்றும் செயற் திறன்

அட்டவணை 2.3.1.3 - ஆ : பெறுபெறுகள் பற்றிய பகுப்பாய்வு - BIT பட்டமளிப்பு வைபவம் - 2016

அனுமதி	முதலாம் தரம்	மேல்	கீழ்	சித்தி	மொத்தம்
BIT	**01**	**11**	**15**	**235**	**262**



உரு. 2.3.1.3 - ஆ : பெறுபெறுகள் பற்றிய பகுப்பாய்வு - BIT பட்டமளிப்பு வைபவம் - 2016

2.3.1.4 பட்டமளிப்பு வைபவத்தின் விருதுகள்

தகவல் தொழில்நுட்பவியல் (வெளிவாரி) பட்டத்தின் சிறந்த செயற் திறனுக்காக வழங்கப்படும் பேராசியரியர் வீ.கே.சமரநாயக்க விருதை திருமதி எஸ்.டீ.பீ.இந்தீவரி பெற்றுக் கொண்டார். சிறந்த தனியாள் செயற் திட்டத்திற்கான விருதை திருமதி எஸ்.டீ.பீ.இந்தீவரி மற்றும் திரு.எம்.டீ.எல்.பெர்னாந்து ஆகியோரும் எம்.ஜே.பீ.யூ.சமன்திலக்க ஞாபகார்த்த விருதை திருமதி எஸ்.டீ.பீ.இந்தீவரி பெற்றுக் கொண்டனர். 4 ஆவது காலாண்டிற்கான சிறந்த இ-கற்கை பயிலுனருக்கான விருதை எம்.எம்.அமீர்டீன் (iv ஆவது காலாண்டு) பெற்றுக் கொண்டார்.

2.3.2 தொடர் கல்விப் பாடநெறி

தெரிவு செய்யப்பட்ட விசேட துறைகளுடன் தொடர்பான குறுகிய காலப் பயிற்சியை வழங்க முடியுமான தொடர் கல்விப் பாடநெறி ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவத்திற்காக கணனி சேவை நிலையமொன்று (CSC) அமைக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் 08 தொடர் கல்வி சான்றிதழ் பாடநெறிகள் UCSC இனால் வழங்கப்பட்டதுடன், அவை 300 மாணவர்களை ஈர்த்துள்ளது.

பொதுவாக வார இறுதியில் நடாத்தப்பட்ட CSC பாடநெறிகள் பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (D – காலம்(நாட்களில்) ; B - குழுக்கள் அல்லாத ; P – பங்குபற்றியோர்). பாடநெறிகளுக்கு செயலூக்கத்துடனான பங்கேற்பை அடிப்படையாகக் கொண்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

அட்டவணை 2.3.2 - அ : CSC பயிற்சித் திட்டங்கள் - 2016

பாடநெறி	D	B	P
JavaSE பயன்படுத்தி Java உள்ளீடுகளை மேம்படுத்தல்	8	3	89
JavaEE பயன்படுத்தி உயர் Java உள்ளீடுகளை மேம்படுத்தல்	8	1	21
Linux முறைமை மற்றும் கணனி வலையமைப்பு நிர்வாகம்	5	2	50
தெற்காசிய ஒத்துழைப்பு சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான பயிற்சித் திட்டம் (SACEP)	6	1	17
உயர் பல்லூடக இணையத்தளங்களை திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொழில்நுட்பம்	8	1	21
Python மூலமாக நிகழ்ச்சித்திட்டவமைப்பு	4	1	15
டெஸ்ட் ஒட்டோமேசன் பிரேம்வர்க்ஸ் மூலம் மென்பொருள் தரச்சான்றிதழ் (Test Automation Frameworks)	5	2	50
தொழில் அபிவிருத்திக்காக கணனி	12	2	71
மொத்தம்		13	334

2.3.3 இணைய வழி மூலமான தொடர் கல்விப் பாடநெறி

நிலவும் பாடநெறிகளின் இணைய வழியிலான கற்கை முறை விருத்திக்காகப் போன்றே தேசிய தேவைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய இணைய வழி மூலமான பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு UCSC இல் இலத்திரணியல் கற்கை நிலையங்கள் அமைக்கப்பட்டது. ICTஇற்கான இணைய வழியை அடிப்படையாகக் கொண்ட பாடநெறியாக மற்றும் க.பொ.த (உ.த) பரீட்சையில் போதியளவு புள்ளிகளைப் பெறாவிட்டால் BIT

பட்டப் பாடநெறிக்காக பதிவு செய்துகொள்ளும் மாற்று வழியாக இணைய வழியை அடிப்படையாகக் கொண்ட பாடநெறியாக தகவல் தொழில்நுட்ட அமைப்பு (FIT), http://fit.bit.lk தாபிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் FIT பாடநெறி பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.3.3 - அ : தகவல் தொழில்நுட்ப அடிப்படை பாடத் திட்டத்துடன் தொடர்பான தரவுகள்

பாடநெறி	புதிதாக பதிவு செய்தல்	மீளப் பதிவு செய்தல்	இலத்திரணியல்-பரீட்சைக்கான கோரிக்கை	இலத்திரணியல்-பரீட்சையில் சித்தி	செய்முறைப் பரீட்சையில் சித்தி
FIT	597	37	628	144	0 (பரீட்சை நடாத்தப்படவில்லை)
இ - தெரிவுக்கான பரீட்சை			11	8	
BIT செய்முறைப் பரீட்சை			3093		1896

2.4 வெளிநாட்டு மாணவர்கள்

UCSC இனை பிராந்தியத்தில் சிறந்த மையமாக நம்புவதனால் அதன் பாடநெறிகளில் பதிவு செய்துகொள்வதற்காக வெளிநாட்டு மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க முடியுமாகியமை முக்கியமாகும். வெளிநாட்டு மாணவர்களுக்கு பதிவு செய்வதற்கு 2% சதவீதம் ஒரு குறுகிய காலப் பகுதிக்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும் குறிப்பிடத்தக்களவு கேள்வி நிலவவில்லை. சில வருடங்களுக்கு முன்னர் நாட்டிலிருந்து வெளியேறி ஏதாவதொரு நாட்டில் உயர் தரக் கல்வியைப் பூர்த்தி செய்துள்ள ஆனாலும் உள்நாட்டுடன் தொடர்புகளைக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். 2011 ஆம் ஆண்டில் வெளிநாட்டு மாணவர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் முதலாவது மாணவன் கணனி முறைமை பட்டப் பாடநெறிக்காக பதிவு செய்யப்பட்டான். 2013 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப முதுமாணிக் கற்கைக்காக பூட்டானிலிருந்து முதலாவது வெளிநாட்டு மாணவன் பதிவு செய்து கொண்டுள்ளதுடன், பின்னர் பாகிஸ்தான் மாணவன் ஒருவன் தகவல் முறைமை விஞ்ஞானமாணி பட்டத்திற்காக பதிவு செய்யப்பட்டுள்ளான். துரதிஷ்டவசமாக 2016 ஆம் ஆண்டில் UCSC இல் வெளிநாட்டு மாணவர்கள் எவரும் பதிவு செய்துகொள்ளப்படவில்லை.

2.5 ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள்

இலங்கை தரத் தகுதி நிலை தேவைகளைக் கவனத்திற்கொண்டு அனைத்துப் பாடநெறிகளையும் மறுசீரமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. விஞ்ஞான முதுமாணித் திட்டத்தின் அனைத்து பாடநெறிகளையும் மறுசீரமைத்து முக்கியமான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பப் பட்டப் பாடநெறிகளுக்காக பட்டதாரிகளின் தரத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கை மேம்படுத்தப்பட்டது. புதிய கணனி மென்பொருள் பொறியியல் நான்கு வருடப் பாடநெறி 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. கைத்தொழில் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக CSC ஊடாக சில புதிய சான்றிதழ் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அட்டவணை 2.5 - அ : 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள் /நிகழ்ச்சித் திட்டங்கள்

பாடநெறி / நிகழ்ச்சித் திட்டம்	சான்றிதழ்	பட்டம்	பட்டப் பின் டிப்ளோமா	விஞ்ஞானமாணி	தத்துவவியல்	கலாநிதி
மென்பொருள் பொறியியல் (இறுதியாண்டுப் பாடநெறி)	-	X	-	-	-	-
தெற்காசிய ஒத்துழைப்பு சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் (SACEP)	X	-	-	-	-	-
Python மூலமாக நிகழ்ச்சித்திட்டவமைப்பு	X	-	-	-	-	-
டெஸ்ட் ஒட்டோமேசன் பிரேம்வர்க்ஸ் மூலம் மென்பொருள் தரச்சான்றிதழ்	X	-	-	-	-	-
மொத்தம்	**3**	**1**	**-**	**-**	**-**	**-**

ஆராய்ச்சிகள்

3. ஆராய்ச்சி

3.1 ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் வெளியீடுகள்

மார்ச்	• கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிறுவனம் சார்ந்த மீளாய்வு நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டதுடன் அதற்கு ‘ஏ’தரம் வழங்கப்பட்டது. • புதிய வெளிவாரிப் பட்டக் கற்கை நிலையம் - BIT அலுவலகம், இல.06, ஸ்வர்ணா வீதி, கொழும்பு 06 எனும் முகவரியில் திறந்து வைக்கப்பட்டது. • வருடாந்த மருத்துவ முகாம் - UCSC ஆளணிக்காக

ஏப்ரல்	• 2016 – புதியவர்களுக்கான போட்டி – 2016 மார்ச் மாதம் 29 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்திற்கு 2 ஆம் இடம் கிடைத்தது. • ஏப்ரல் 6 ஆம் திகதி அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் மற்றும் இரகசியப் பொலீஸாருக்காக KOICA வினால் நிதி வழங்கப்படும் புதிய பயிற்சி நிலையமொன்றை ஆரம்பித்தல். • புதிய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டு விழா ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி.
மே	• மே 12 ஆம் திகதி IEEE மாணவர்களால் ஏனைய அரச பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு இலங்கை ரெலிகொம் கம்பனியின் ரீட் சய்பர் போர் விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. • 3 ஆம் ஆண்டு மாணவர்கள் மே மாதம் 13 ஆம் திகதி ‘பெதுரு சாஜ்ஜய’ எனும் பாரம்பரிய இசை நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. • மே மாதம் 20 ஆம் திகதி துணை வேந்தரால் ஏற்பாடு செய்யப்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அன்பளிப்புக்காக ஆளணி அங்கத்தவர்கள் சிறப்பான வகையில் பங்களைப்பைச் செலுத்தினர். • மே 26 ஆம் திகதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிலாபத்தைச் சேர்ந்த கிராம மக்களுக்கு உதவி வழங்குவதற்காக மாணவர்களால் "UCSC சஹன யாத்ரா" எனும் நிவாரணப் பணி ஏற்பாடு செய்யப்பட்டது. உதவி உபகாரங்களை வழங்கும்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூபா 2.5 மில்லியன் பெறுமதிமிக்க பொருட்கள் வழங்கப்பட்டன. • மே 29 ஆம் திகதி ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு "ifest2k16" எனும் பெயரில் ISACA மாணவர் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டது. • 2013.05.30 ஆம் திகதி கடந்த ஆறு வருட காலமாக பணிப்பாளராகப் பணியாற்றிய பேராசிரியர் திரு.எச்.ஆர்.விக்கிரமநாயக்க அவர்களின் சேவையை மதிப்பீடு செய்வதற்கான விசேட வைபவம் UCSCஇல் நடைபெற்றது. துணைவேந்தர், பீடாதிபதி உட்பட்ட விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் ஏனைய அனைத்து ஆளணி அங்கத்தவர்களும் பேராசிரியர் திரு.எச்.ஆர்.விக்கிரமநாயக்க அவர்களுக்கு நன்றி தெரிவிக்குமுகமாக இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள் • கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட UCSC இன் திருத்தப்பட்டவாறான இணையத்தளமானது 2013.05.30 ஆம் திகதி துணை வேந்தரால் Web / UOC ஆரம்பித்துவைக்கப்பட்டது.
ஜுன்	• ஜுன் 1 ஆம் திகதி புதிய பணிப்பாளராக பேராசிரியர் கே.பீ.ஹேவாகமகே அவர்கள் கடமையைப் பொறுப்பேற்றார். • கலாநிதி டீ.ஏ.எஸ்.அத்துகோரள புதிய பிரதிப் பணிப்பாளராக கடமையைப் பொறுப்பேற்றார். • கலாநிதி எம்.டீஎன்.எஸ்.குணதிலக்க தகவல் முறைமை பற்றிய பொறியியல் கற்கைப் பிரிவின் தலைவராக கடமையைப் பொறுப்பேற்றார். • ஜுன் 8 ஆம் திகதி காலஞ்சென்ற பேராசிரியர் சமரநாயக்க அவர்கள் தொடர்பான நினைவுமலர்வெளியீடு • ஜுன் 22 ஆம் திகதி மாணவர்கள் மற்றும் ஆளணியினர் இணைந்து பொசொன் பக்தி கீதங்கள் நிகழ்ச்சியை நடாத்தியமை • ஜுன் 22 ஆம் திகதி 05 ஆளணி அங்கத்தவர்களுக்கு விருது வழங்கப்பட்டமை • ஜுன் 28 ஆம் திகதி தகவல் முறைமை பட்டப் பாடநெறிக்கு தெரிவு செய்வதற்கான பரீட்சை நடாத்தப்பட்டது. • ஜுன் 30 ஆம் திகதி பேராசிரியர் சமன் ஹல்கமுகே வெளிவாரிப் பேராசிரியராக தனது பணியை ஆரம்பித்தார்

ஜுலை	• நிரந்தர கல்விசார் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை ஜுலை 1 ஆம் மற்றும் 4 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. • ஜுலை 1 ஆம் திகதி மாணவ மாணவர்களின் குழுப் புகைப்படம் எடுத்தல். • 2016 கல்வியாண்டின் 1 ஆவது அரையாண்டில் பட்டப் பாடநெறி நிறைவு செய்யப்பட்டது. • 1 ஆவது தவணைக்கான பரீட்சை ஆரம்பிக்கப்பட்டாலும் கல்விசாரா ஆளணியின் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக பிற்போடப்பட்டது. • கணனி விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான முதுமாணிப் பட்டப் பாடநெறிக்காக ஆரம்ப பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டது.
ஆகஸ்ட்	• தொழிற் சங்க நடவடிக்கைகள் காரணமாக நடைமுறைச் சிக்கல்கள் காரணங்களின் அடிப்படையில் அனைத்து சட்ட ரீதியிலான கூட்டங்களையும் பிற்போடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. • 14 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. • 2017 ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி விஞ்ஞான முதுமாணிப் பாடநெறிக்காக விண்ணப்பம் கோரல். • KOICA பயிற்சிப் பட்டறை ஆகஸ்ட் 22 ஆம் திகதி UCSC மண்டபத்தில் நடாத்தப்பட்டது. • BIT டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம் ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி NAT நிறுவனத்தில் நடைபெற்றது. • தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக பிற்போடப்பட்ட அனைத்து UCSC பட்டப் பாடநெறிகளுக்கான தெரிவுப் பரீட்சைகளும் 2016 ஆகஸ்ட் 31 ஆம் திகதி நடாத்தப்பட்டன.
செப்டெம்பர்	• செப்டெம்பர் 1 மற்றும் 2 ஆம் திகதிகளில் நீர்கொழும்பு ஜெட்வின்ங் ப்ளூ ஹோட்டலில் ICTer - 2016 மாநாடு நடாத்தப்பட்டது. • ICTer-2016 செயலமர்வு செப்டெம்பர் 3 ஆம் திகதி UCSC இல் நடைபெற்றது. • BIT பட்டமளிப்பு விழா பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி நடாத்தப்பட்டது. 262 மாணவர்கள் தமக்குரிய பட்டச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டனர். • UCSC ஆளணியின் வருடாந்த ஒன்றுகூடல் மற்றும் பயிற்சி அமர்வு 2016 செப்டெம்பர் 15 முதல் 17 வரை நடாத்தப்பட்டது. • "பாரமித்தா 2016" - வருடாந்த இரத்த தான முகாம் 2016 செப்டெம்பர் 22 ஆம் திகதி நடாத்தப்பட்டது. • Pre -IEEE Xtreme நிகழ்ச்சித் திட்டப் போட்டி 1.0, 2016 செப்டெம்பர் 24 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
ஒக்டோபர்	• UCSC விளையாட்டு தினம் (1ஆவது மற்றும் 2 ஆம் ஆண்டு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட) ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி நடாத்தப்பட்டது. • பட்டத்தை முடித்ததன் பின்னர் விலகச் செல்லும் விழா (இறுதியாண்டு மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள்) ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி நடாத்தப்பட்டது. • BIT அரையாண்டு. 4,6 மற்றும் 2 இற்குரிய பரீட்சைகள் ஒக்டோபர் 1, 2 ,8 ,9 ,22 , 23 ஆம் திகதிகளில் கொீம்பிலும் ஒக்டோபர் 1, 8, 9, 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் காலி, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் நடைபெற்றது. • IEEE தினம் (கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் IEEE மாணவர் பிரிவினால் உலகளாவிய நினைவு தினத்துடன்

	இணையான வகையில் " புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் புதிய தொழில்நுட்பம்" என்ற தொனிப்பொருளின் கீழ் IEEE தினத்தை நினைவுகூரல்) ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி நடாத்தப்பட்டது. • டிரெக்ட் FN மற்றும் முபாசருடன் (Mubasher) இணைந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் ISACA மாணவர் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட iHack 2.0 - 24 மணி நேர கணனி மென்பொருள் மேம்பாட்டுப் போட்டி ஒக்டோபர் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. • ஒக்டோபர் மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் FITIS மற்றும் கல்வியமைச்சுடன் ஒன்றிணைந்து யோன்ங் கணனி அறிவியலாளர்கள் (YCS) போட்டியொன்றை ஏற்பாடு செய்ததுடன் அப்போட்டி பற்றிய மதிப்பீடு கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. • "Romenthem" - புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு புதிய கலையரங்கத்தில் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி நடாத்தப்பட்டது. • விஞ்ஞான முதுமாணிப் பட்டத்திற்காக தெரிவு செய்யும் பரீட்சை ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி மருதானை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. • UCSC தொழில் சந்தை ஒக்டோபர் 17 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன், இங்கு 25 கம்பனிகளால் இறுதியாண்டு மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டார்கள். // caree : http. ucsc.lk/ • 2017-21ஆண்டிற்கான UCSC மூலோபாயத் திட்ட அபிவிருத்திச் செயலமர்வு ஒக்டோபர் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. • IEEE எக்ஸ்ட்ரீம் புரோகிரேமிங் போட்டி ஒக்டோபர் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. • வன்னி விழா (தமிழ் மாணவர்களின் ஆண்டு விழா) ஒக்டோபர் 28 ஆம் திகமி நடாத்தப்பட்டது. • நெக்ஸ்ட் ஜென். ஸ்மார்ட் டெக் செலேன்ஜ் UCSC "WhileLoop" கிண்ணத்திற்கான குழு - ஜனசக்தி புல் ஒப்சன் Appathon சவால் கிண்ணம் 2016 - போட்டி ஒக்டோபர் 29 ஆம் திகதி நடாத்தப்பட்டது. • CSSL மற்றும் கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய பாடசாலை கணனி மென்பொருள் போட்டிக்கான (NSSC) இணையவழிப் பரீட்சை ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி UCSC இல் UCSC நிறுவனத்தின் ஆளணி அங்கத்தவர்கள் மற்றும்மாணவர்களின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டது. (நாட்டில் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த 20 பாடசாலை மாணவர்கள் தமது நிகழ்ச்சித் திட்டங்களை முன்வைக்கும் கண்காட்சியில் கலந்துகொண்டனர்) • டிஜிட்டல் உள்ளடக்கங்களை நிர்மாணிக்கும் சிறந்த இனங்காணல் நோக்கத்துடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தினால் ஒக்டோபர் 31 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட "e-ஸ்வாபிமானீ விருது - 2016" இல் "m- கன்டென்ட் , சேர்த்தல் மற்றும் அதிகாரமளிப்பு மற்றும் கலாசாரம் மற்றும் சுற்றுலா(Inclusion and Empowerment and Culture and Tourism) எனும் மூன்று பிரிவுகளின் கீழ் UCSC மூன்று விருதுகளைப் பெற்றுக் கொண்டது.
நவம்பர்	• ஏ.சீ.எம்.கொழும்பு அத்தியாயம் உத்தியோகபூர்வமாக நவம்பர் 19 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. • YCS மற்றும் NSSC போட்டி நவம்பர் மாதம் 25 ஆம் திகதி கல்வி அமைச்சில் விருது வழங்கும் வைபவம் கணனிக் கற்கை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. • விஞ்ஞான முதுமாணிப் பட்டத்திற்காக தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு நவம்பர் 20 மற்றும் 27 ஆம் திகதிகளில் நடைபெற்றது. • 2D / 3D தொழில்நுட்பத்தை காண்பிப்பதற்காக நவம்பர் மாதம் 29 ஆம் திகதி Optitex கம்பனி UCSC இற்கு மேற்கொண்ட விஜயம் • மலேஷியப் பிரதிநிதிகள் - (மலேஷியாவின் பர்லிஸின் இளவரசரைப் போன்றே பர்லிஸ் பல்கலைக்கழகத்தின் (UNIMAP) துணைவேந்தர் டுவேன்கு சயீட் பய்சுதீனின் புதல்வர் இப்னு சயீட் சிராஜுதீன் ஜமாலுல்லா,

	மலேஷியாவின் உயர் ஸ்தானிகர் அதிமேதகு வான் சயிட் வான் அப்துல்லா பர்லிஸ், திரு. அசார் மட், உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதானி பேராசிரியர் டேட்டோ ஜமால், மலேஷிய UNAMP பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி சுலாஷர் பின் சயீட் ஆகியோர் நவம்பர் 30 ஆம் திகதி UCSC நிறுவனத்திற்கு வருகை தந்தனர்.
டிசம்பர்	• BITஇறுதி வாய் மூல மற்றும் எழுத்து மூலமான செயற் திட்ட மதிப்பீடு டிசம்பர் 3 ஆம் திகதி நடாத்தப்பட்டது. (டிசம்பர் 10, 11, 17 மற்றும் 18 ஆம் திகதிகளிலும் நடாத்தப்பட்டது.) • கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வைபவம் டிசம்பர் 6 ஆம் திகதி நடைபெற்றது. • கலாநிதி Keong இனால் "பயன்பாட்டில் இருக்கும் தரவுகளைப் பாதுகாத்தல்" பற்றிய அழைப்பு விரிவுரையாளர் விரிவுரை சிங்கப்பூரின் நென்யேங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் கல்லூரியின் உதவித் தலைவர் (ஆராய்ச்சி) வீநியோங் அவர்களினால் டிசம்பர் 6 ஆம் திகதி நடாத்தப்பட்டது. • உயிரி புள்ளியியலுடன் தொடர்புடைய " உயர் அளவிலான தரவுப் பகுப்பாய்வு : சிக்கல்கள் மற்றும் முறைகள்" தொனிப்பொருளின் கீழ் கலாநிதி தம்மிக்க அமரதுங்க அவர்களின் (பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம்) முன்னிலைப்படுத்தல் டிசம்பர் 8 ஆம் திகதி நடாத்தப்பட்டது. • தகவல் தொழில்நுட்ப பட்டப் பாடநெறிக்காக விண்ணப்பம் கோரல் டிசம்பர் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. • டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி கணனி விஞ்ஞானம் மற்றும் தகவல் முறைமை பட்டப் பாடநெறிக்கு 2015/2016 கற்கை ஆண்டிற்கான புதிய பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. • 2016 கற்கை ஆண்டின் பட்டப் பாடநெறியின் இரண்டாவது அரையாண்டிற்கான பரீட்சை டிசம்பர் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. • டிசம்பர் 19 ஆம் திகதி முதுமாணிப் பட்டத்திற்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் பற்றிய விபரம் வெளியிடப்பட்டது. • விஞ்ஞான முதுமாணி பட்டப் பாடநெறியின் பாட விதானத்தை மேம்படுத்தல் சம்பந்தமான முதலாவது செயலமர்வு டிசம்பர் 22 ஆம் திகதி நடாத்தப்பட்டது. • UCSC நிறுவனத்தின் கத்தோலிக்க மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த கரோல் சேவை டிசம்பர் 23 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

IEEE
Sponsors:
2016
16th Internation
Advances in ICT fo

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය எனது இல. My No.	எச்ஈடீ/பீ/யூசீஎஸ்சீ/ 6/16/02	ඔබේ අංකය உமது இல. Your No.		දිනය திகதி Date	2017 செப்தெம்பர் 30

பணிப்பாளர்

கொழும்பு பல்கலைக்கழகக் கணனி கற்கை நிறுவகம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள்

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்திற்கு முரணான வகையிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர் கல்வி அமைச்சரினதும் சிபாரிசுடன் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி 2006 திசெம்பர் 29 ஆந் திகதி கணனி கற்கை நிறுவகத்திற்குள் பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக வரையறுக்கப்பட்ட தீக்ஷண கம்பனி ஸ்தாபிக்கப்பட்டு 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2009 மார்ச் 02 ஆந் திகதி மீண்டும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.

வரையறுக்கப்பட்ட தீக்ஷண கம்பனி தனியான சட்டரீதியான அலகொன்றாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் கணனி கற்கை நிறுவகத்தின் வளங்களைப் பயன்படுத்தி கற்கை நிறுவக வளாகத்தில் பேணிச் செல்லப்படுகின்றது. கம்பனி வீதிகளின் 32 ஆவது பிரிவின் பிரகாரம் அக் கம்பனியின் முகாமைத்துவ சபைக்கு கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவகத்தின் உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் வரையறுக்கப்பட்ட தீக்ஷண கம்பனி, கணனி கற்கை நிறுவகத்தின் 100 சதவீத பூரண கட்டுப்பாட்டு அதிகாரத்துடன் காணப்படுகின்ற துணைக் கம்பனியொன்றாக இருக்கின்றமை தெளிவாகும்.

அதன் பிரகாரம் கணனி கற்கை நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் வரையறுக்கப்பட்ட தீக்ஷண கம்பனியின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றிணைந்த கணக்குக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்குரிய கணனி கற்கை நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் தீக்ஷண கம்பனியின் நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் பிரகாரம் நிதிக்கூற்றுத் தொகுதிகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட உரிமை மூலதன மாற்றங்கள் தொடர்பான கூற்றில் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம், நிச்சயமற்ற நிதியம் மற்றும் அரசினதும் செயற்திட்டத்தினதும் மானியம் தொடர்பான வேறுபாடுகள் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.

2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள தொழிற்படு மூலதன வேறுபாடு ரூபா 52,311,123 மறைப் பெறுமதியாக இருந்த போதிலும், பிரிவு ரீதியான வகைப்படுத்தப்பட்ட கணக்குகளின் பிரகாரம் தொழிற்படு மூலதன வேறுபாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 52,328,438 மறைப் பெறுமதி ஆனமையால் ரூபா 17,315 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 250,747,519 தொகையான நிலையான சொத்துக்களின் மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியுமான வகையில் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடன்பட்டோர் மீதியில் 2014 ஆம் ஆண்டு முதல் நிறுவகத்திற்குக் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 488,500 தொகையான மீத இது வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்று ஊழியர்களிடமிருந்தும் மூன்று விரிவுரையாளர்களிடமிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 349,503 பெறுமதியான ஊழியர் கடன் மற்றும் இடர் கடன் மீதிகள் 23 வருடங்கள் கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(இ) உடன்படிக்கை மற்றும் பிணை முறிகளை மீறியதன் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நான்கு விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடவேண்டியிருந்த மீதி ரூபா 6,517,800 ஆகும். இந்த மீதி 2-13 வருடங்களுக்கிடையிலான காலமாக கொண்டுவரப்படுவதுடன் இது வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டம்	சகல பல்கலைக்கழகங்களினதும், வளாகங்களினதும் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்களினதும் நியதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் அது அமுல்படுத்தப்படும் போது இயலுமான வரையில் விரைவாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட

		வேண்டியிருந்த போதிலும், 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவக வழிகாட்டி 2002 நவம்பர் 15 ஆந் திகதிய 1262/32 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கை	I முற்பணமொன்று வழங்குதல் ஏதாவது பதவிநிலையில் உள்ள உத்தியோகத்தருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பதவிநிலையற்ற 26 உத்தியோகத்தர்களுக்கு 267 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5,408,585 கூட்டுப்பெறுமதியான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. II ஒரு தடவையில் வழங்க முடியுமான ஆகக் கூடிய முற்பணத் தொகை ரூபா 100,000 ஆக இருந்த போதிலும், நிறுவகத்தினால் ரூபா 119,500 முதல் ரூபா 338,500 வரையிலான வீச்சில் 07 சந்தர்ப்பங்களில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.
(இ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர்கல்வி நிறுவகங்களினதும் தாபன விதிக் கோவையின் 1 ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பந்தி	மேலதிக நேரடிப்படி செலுத்தும் போது அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்ட வீதம் உரித்தாக்கிக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2016 ஆகஸ்ட் வரை நிலையான படியொன்றின் அடிப்படையில் மேலதிக நேரடிப்படி செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 79,248 கணனி விஞ்ஞான முதுமாணி பட்டப் பிரிவின் (MSC) ஊழியர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ)	2016 சனவரி 01 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை	வெளிவாரி பரீட்சைகளுக்காக வினாப் பத்திரங்களைத் தயாரித்தல், பரீட்சித்தல், மதிப்பீட்டுப் பரிசோதனை, மெய்மையாய்வுக் கட்டணம் மற்றும் பரீட்சகர் கட்டணங்களுக்காக செலுத்த வேண்டிய ஆகக் கூடிய கட்டண எல்லை சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த எல்லையினை விஞ்சி தகவல் தொழில்நுட்ப பட்டப் பாடநெறி (வெளிவாரி) (BIT) மற்றும் தகவல் தொழில்நுட்ப முதுமானி பட்டப்பாடநெறிக்காக (MIT) ரூபா 331,140 தொகை செலுத்தப்பட்டிருந்தது.
(உ)	2005 திசெம்பர் 19 ஆந் திகதிய பீஈடீ/33 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	மீளாய்வாண்டின் போது ரூபா 153,382,904 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை திறைசேரியின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பெறுமதி ரூபா 504,432,342 ஆகும்
(ஊ)	2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 03 ஆம் அத்தியாயம்	கணனி விஞ்ஞானம், தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பப் பிரிவுகளில் கற்பித்தல், பயிற்சியளித்தல், ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் மற்றும் மதியுரைச் சேவைகளை வழங்கும் பாடநெறிகளுக்காக கல்வி நிறுவகங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் சிபாரிசின் அடிப்படையில் ஆணைக்குழுவின் சிபாரிசு தேவையாக இருந்த போதிலும், நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற 08 பாடநெறிகள் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் பதவியணியினரால் நிதியத்தைப் பயன்படுத்தி நடாத்திச் செல்லப்படுகின்ற நலன்புரி நிதியத்திற்கு பாடநெறிகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானத்திலிருந்து ரூபா 1,245,796 தொகை மாற்றப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட நிதிய மாற்றத்திற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகளில் வெளிநாட்டு செயற்திட்டங்களிலிருந்து சேமிக்கப்பட்ட ரூபா 18,522,348 தொகை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர்கல்வி அமைச்சு அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி பதவியணியினர் அபிவிருத்தி (Staff Development) மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 24,205,857 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,627,695 ஆக இருந்தது. முன்னைய ஆணடுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 16,578,162 இனால் அதிகரித்திருந்தது. ஊழியர் நலன்புரிச் செலவினம் ரூபா 20,506,634 இனால் அதிகரித்திருந்த போதிலும் அரசாங்க மானியம் ரூபா 37,700,000 இனால் அதிகரித்திருந்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012, 2013 மற்றும் 2014 ஆகிய மூன்று வருடங்களுடனும் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மிகை குறைவடைந்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மிகை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கவனத்திற் கொள்ளும் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பங்களிப்பு 23 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2012 ஆம்

ஆண்டில் ரூபா 185,637,653 தொகையான பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 194,077,496 ஆகக் காணப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தந்திரோபாயத் திட்டத்தின் படி சர்வதேசத்துடன் ஒன்றிணைந்த பட்டப்பின் பட்ட (International Joint Masters) பெயரிலான புதிய பாடநெறியொன்று 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 மார்ச் 30 வரையும் இந்த பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தந்திரோபாயத்திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள செயற்பாடுகளின் செயல்முன்னேற்றத்தைக் காண்பிக்கின்ற அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணப்படுகின்ற பாடநெறிகளுக்கான பாட சிபாரிசுகள் நாளதுவரையாக்கப்பட்டு, காலத்தின் தேவையின் அடிப்படையில் புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தி புதிய கண்டு பிடிப்புக்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்காக கூடுதலான கவனத்தைச் செலுத்தி கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. அதனால் தனியார் பல்கலைக்கழகம், வெளிநாட்டு பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய நிறுவகங்களின் மூலம் தகவல் தொழில்நுட்ப விடயம் தொடர்பாக புதிய பட்டப்பாடநெறியை அறிமுகப்படுத்தி கணிசமான மாணவர் தொகையொன்றை அதற்கு கவர்வதன் ஊடாக இந்த நிறுவகத்தின் வெளிவாரி பட்டப் பாடநெறிகளுக்கு பாரிய சவால் ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணனி கற்கை நிறுவகத்தில் நிர்வாக மற்றும் கற்கை நடவடிக்கைகளுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த 05 மாடிகளையுடைய கட்டிடத் தொகுதி அமைந்துள்ள காணி கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக

இருந்ததுடன் அந்தக் கம்பனியின் உரித்தைக் கையேற்பதற்கு நிறுவகம் இது வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

2016 ஆம் ஆண்டில் மூலதன செலவின விடயத்திற்காக பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 245,000,000 தொகையான நிதிஏற்பாடுகளில் ரூபா 38,000,000 தொகை நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செயற்திறனாக பயன்படுத்தப்படாமல் 2016 திசெம்பர் 28 ஆந் திகதி குறுங்கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

நிறுவகத்தால் நடாத்திச் செல்லப்படுகின்ற இருப்பு அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 570,629 பெறுமதியான அசைவுறாத இருப்புக்கள் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் காணப்படுவதுடன் அவற்றின் அடிப்படையில் தேவையற்ற வகையில் நிதி பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

4.5 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் காணப்படுகின்ற 85 வெற்றிடங்களுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களுக்கு புறம்பாக ஒப்பந்த அடிப்படையில் நாளாந்த அடிப்படையிலும், பணிப்பொறுப்பு கையளித்தல் அடிப்படையிலும் 34 ஊழியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டு தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 பெறுகைகள் திட்டம்

2016 ஆம் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 06 பணிகளை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்ததுடன் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 1,827,020 பெறுமதியான 08 பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்	அவதானிப்புக்கள்
(அ) சொத்துக் கட்டுப்பாடு	சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்க வில்லை.
(ஆ) நிதிக் கட்டுப்பாடு	பதவிநிலையற்ற உத்தியோகத்தருக்கு முற்பணம் வழங்குதல், எல்லையை மிகைத்து முற்பணம் வழங்குதல் மற்றும் தேவையை இனங்காணாது முற்பணம் வழங்கியமை
(இ) பதவியணியினர் நிர்வாகம்	பதவியணியினர் தேவையின் பிரகாரம் அங்கீகாரிக்கப்பட்ட பதவியணியைத் திருத்துதல், மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை.
(ஈ) செயற்பாட்டு நிர்வாகம்	புதிய பாடநெறிகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை.

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

University of Colombo School of Computing

The force behind ICT Education in Sri Lanka

35, Reid Avenue, Colombo 00700, Sri Lanka

2017-12-20

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்
306/72, பொல்தூவ வீதி
பத்தரமுல்லை.

ஐயா

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான 2002 இன் 1 ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் விவரக் குறிப்பின் 23 ஆவது உறுப்புரை மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(1) உறுப்புரைக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்.

மேற் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அறிக்கை 2017.10.31 ஆம் திகதி நடைபெற்ற நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் அதற்கான எமது பதில்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

02. நிதிக் கூற்றுக்கள்

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 ஒன்றிணைந்த கூற்றுக்கள்

கொழும்பு பல்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனம் வரையறுக்கப்பட்ட நுண்ணறிவார்ந்த கம்பனியொன்றை தாபிக்காதிருப்பதுடன், அவ்வாறான நுண்ணறிவுக் கம்பனியொன்றை தாபிப்பதற்கு எந்தவிதமான சட்ட ரீதியிலான ஏற்பாடுகளும் இல்லை.

எமது நிறுவனத்தின் நிரந்தரப் பணியாட் தொகுதியைச் சேர்ந்த சில அங்கத்தவர்களால் வெளிவாரியான திட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கற்கை நிறுவனத்தில் முறையான அங்கீகாரத்துடன் வரையறுக்கப்பட்ட நுண்ணறிவார்ந்த கம்பனி தாபிக்கப்பட்டது. அந்த நுண்ணறிவார்ந்த கம்பனி எமது நிறுவன வளவினுள் தாபித்தமைக்காக கணனிக் கற்கை நிறுவனத்தின முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படும் வருடாந்த வாடகை நுண்ணறிவுக் கம்பனியால் செலுத்தப்படுகின்றது.

எமது நிறுவனத்திற்கு நுண்ணறிவுக் கம்பனியின் எந்தவிதமான உரிமையோ அல்லது பொறுப்போ கிடையாது. எவ்வாறாயினும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி இது தொடர்பாக அறிவித்துள்ளமையினால் அது தொடர்பாக தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையின் பரிந்துரையுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் கணக்காண்வாளர் தலைமை அதிபதியவர்களின் அறிக்கைக்கமைய உரிய முறையில் இந்த நிறுவனம் சம்பந்தமான தெளிவின்றி தவறான வகையில் கணக்குகளை ஒன்றிணைத்திருந்தபோதிலும் 2016 ஆம் ஆண்டில் அதனை சீர் செய்தல் வேண்டுமென முகாமைத்துவ சபை தீர்மானித்தது.

2.2.2 <u>இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்</u>

பங்கு மாற்றல் கூற்றில் குறிப்பிட்ட சீர்படுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டன.

2.2.3 <u>விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்</u>

பிரிவு ரீதியாக வகைப்படுத்தப்பட்ட கணக்குகளில் ரூபா 17,315.00 மேலதிகமாக குறிப்பிடப்பட்டிருந்த தொகை சீர் செய்யப்பட்டது.

2.2.4 <u>கணக்காய்வுக்காக ஆதாரப்படுத்தப்படாமை</u>

2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்வுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனாலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் மொத்தப் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெறுமதியுடன் ஒப்பிட்டு நோக்குவதற்கு முடியாதிருந்ததனால் சமர்ப்பிக்கப்படவில்லையென கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

2.3 <u>பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்</u>

(அ) இந்த பெறப்பட வேண்டிய நிலுவைகள் அரசாங்க நிறுவனங்களுக்கு பல்வேறு வகையான கணனி சேவைகளை வழங்கியமைக்காக பெறப்பட வேண்டிய தொகையாகும். உ-ம்: சட்டமும் ஒழுங்கும் அமைச்சின் பல பொலீஸ் நிலையங்களுக்காக நீதிமன்றங்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட சேவைகளுக்காக பெறப்பட வேண்டிய தொகையாகும். இந்தத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக அடிக்கடி வாய் மூலமான மற்றும் எழுத்து மூலமான நினைவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) இந்த அறவிடப்பட வேண்டிய இடர் கடன் தொகை மற்றும் ஊழியர் கடன் தொகை, இரண்டு விரிவுரையாளர்கள் மற்றும் எமது நிறுவனத்திலிருந்து விலகிச் சென்ற மூன்று அங்கத்தவர்களுடையதாகும்.

இரண்டு விரிவுரையாளர்களில் ஒருவர் மீண்டும் சேவையில் இணைந்துள்ளமையினால் அவரிடமிருந்து அறவிட்டுக்கொள்ள வேண்டிய மொத்தக் கடன் தொகையை 2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தித் தீர்ப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

அடுத்த விரிவுரையாளர் ஒப்பந்தத்தை மீறியுள்ளதுடன் அவர் தற்போது இருக்கும் இடத்தை கண்டறிய முடியாதிருப்பதன் காரணமாக அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எமது நிறுவனத்திலிருந்து விலகிச் சென்றுள்ளவர்களுக்கு எமது நிறுவனத்தினால் செலுத்தப்பட்டுள்ள பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையை இதுவரை விடுவிக்காதிருப்பதுடன், அவர்களுக்குரிய பங்களிப்புத் தொகையிலிருந்து குறிப்பிட்ட கடன் தொகையை அறவிட்டுத்தருமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ) ஒப்பந்தம் மற்றும் பிணை முறி மீறல்கள் தொடர்பான அறவீடுகள் தொடர்பில் நிறுவனத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

திரு. எஸ்.ஜே. பகீரதன்

திரு. எஸ்.ஜே. பகீரதன் பிணை முறியை மீறியமையினால் பல்கலைக்கழகத்திற்கு ரூ. 3,440,575.75 தொகை செலுத்த வேண்டியிருந்தது. அவருக்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. வழக்கு இலக்கம் DMR/07902/10. இதனுடன் இணையாக பிரதிப் பதிவாளர் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் ஆகியோர் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலீஸாரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது, அவர் வேறொரு நாட்டுப் பிரஜாவுரிமையைப் பெற்று வேறு பெயரொன்றுடன் இலங்கைக்கு வந்து விசாரணை நடைபெறுவதற்கு முந்திய நாள் நாட்டிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. அவருடைய பிணையாளியும் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகி இருப்பதனால் இந்தத் தொகையை அறவிட்டுக்கொள்வது சிரமமாகவுள்ளது. ஆனாலும் அவரது ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகையின் இருப்பு 2016.12.31 ஆம் திகதியன்று ரூபா 2,069,793.46 ஆக இருப்பதுடன் அத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு 2016.12.05 ஆம் திகதி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், அந்தத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சேமலாப நிதியத்தின் சேமிப்பை அறவிட்டதன் பின்னர் நிலவும் மீதித் தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ருக்மன் சேனாநாயக்க

திரு. ருக்மன் சேனாநாயக்க பிணை முறியை மீறியமையினால் பல்கலைக்கழகத்திற்கு ரூ. 798,588.54 செலுத்த வேண்டியுள்ளது. அவரது ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகையின் இருப்பு 2016.12.31 ஆம் திகதியன்று ரூபா 409,207.86 ஆக இருப்பதுடன் அத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு 2016.03.31 ஆம் திகதி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், அந்தத் தொகை தற்போது அறவிடப்பட்டு வருகின்றது. மீதித் தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. டப்ளியு.ஆர்.எம்.யூ.கே. விக்கிரமசிங்க

திரு. உபாலி விக்கிரமசிங்க பிணை முறியை மீறியமையினால் பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த முழுத் தொகையும் அறவிடப்பட்டுள்ளது.

திரு. எம்.சீ.ஜயவர்தன

திரு. எம்.சீ.ஜயவர்தனவிடமிருந்து பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 5,976,485.89 தொகையில் அவர் 2016.07.22 ஆம் திகதி ரூபா 3,289,238.00 தொகையை செலுத்தியுள்ளதுடன் 2016.10.31 ஆம் திகதியன்று அவருக்குரிய பணிக்கொடையிலிருந்து ரூபா 259,272.50 தொகை அறவிடப்பட்டது. இதற்கமைய, அவரிடமிருந்து 2017.03.31 ஆம் திகதியன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த தொகையான ரூபா 2,427,975.39 தொகையில் 2016.12.31 ஆம் திகதியன்று அவரது ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகையின் இருப்புத் தொகையான ரூபா 1,691,999.93 தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அவரது ஓய்வூதிய நிதியத்தின் இருப்புத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கமைய, இவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையும் அறவிடப்பட்டுள்ளது.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

(அ) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தை தாபிப்பதற்கான சட்டம் 2002 ஆம் ஆண்டில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுடன், 2011 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. அவ்வாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும் என்ற விடயம் பற்றி எமக்கு அறவுறுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இது சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கின்றேன்.

(ஆ) (I) எமது நிறுவனத்தில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இருப்பதனாலும், நிறுவனத்தில் முற்பணத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்துக்கும் நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் மேற்கொள்ள முடியாதிருப்பதனாலும் பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கும் பதவிநிலை உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனாலும் 2016 ஜூன் மாதத்தின் பின்னர் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

(II) நாடு பூராவும் வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளை நடாத்துவதற்காகவே இந்த முற்பணம் வழங்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவில் கலந்துரையாடப்பட்டு ரூபா 100,000.00 இலும் அதிகளவு தொகை முற்பணத்தை வழங்காதிருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

(இ) பட்டப்பின் பாட நெறிக்கான விரிவுரைகள் வார இறுதி நாட்களில் நடாத்தப்படுவதனால் இந்தப் பாடநெறியின் வரவு செலவுத் திட்ட அறிக்கையானது அந்தப் பாடநெறியை தடங்கல்களின்றி நடாத்துவதற்காகப் பெற்றுக்கொள்ளப்படும் சேவைகளை அலுவலக நேரத்தின் பின்னர் மற்றும் வார இறுதி நாட்களில் நடாத்துதல் மற்றும் அதன் செலவைக் கவனத்திற்கொண்டே தயாரிக்கப்படுகின்றது. மேலும், அந்தப் பாடநெறிக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை எமது நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்படுவதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியின் கீழ் இந்த செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) இந்த வெளிவாரிப் பரீட்சைகளுக்கான செலுத்துகைகள் தொடர்பாக வலுப்பெறும் வரையறைகள் குறிப்பிடப்பட்டிருக்கும் சுற்று நிருபம் 2016 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளதுடன், எமது நிறுவனத்தினால் நடாத்தப்படும் வெளிவாரிப் பட்டப் பாடநெறிகள் தொடர்பாக வலுப்பெறும் செலுத்துகை வீதங்கள் (Rates) சில வருடங்களுக்கு முன்னர் முதல் செலுத்தப்பட்டிருப்பதனால் மேற் குறிப்பிடப்பட்ட சுற்று நிருபம் வெளியிடப்பட்டாலும் பாட நெறிகளை தடங்களின்றி நடாத்துவதற்காக இந்த செலுத்துகைகளை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.

(உ) நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்காக நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் பரிந்துரையுடன் திறைசேரியின் அங்கீகாரத்திற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

(ஊ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பட்டப் பாடநெறிகளுக்கு மாத்திரமே அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. எம்மால் நடாத்தப்படும் அனைத்து பட்டம் மற்றும் பட்டப்பின் பாடநெறிகளுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

2.5 போதுமானளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) நிறுவனத்தின் பணியாட் தொகுதி அங்கத்தவர்களால் அவர்களது நலனோம்புகைக்காக நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் ஆசிர்வாதத்துடன் இந்த நலன்புரிச் சங்கம் அமைக்கப்பட்டது. இந்த நலன்புரிச் சங்கத்தின் அலுவல் என்னவெனில் நிறுவனத்தின் வழிகாட்டலின் கீழ் ஊழியர்களை ஊக்குவித்தல் மற்றும் குழுச் செயற்பாடுகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துவதாகும். இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதியின் ஒரு பகுதியை நிறுவனத்தினால் நடாத்தப்படும் பாட நெறிகளுக்காக அறவிடப்படும் நிதியத்தின் ஊடாக முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் பயன்படுத்தப்படுகின்றது. ஏனெனில் இதன் மூலம் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு அன்று முதல் உந்துதல் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) எமது நிறுவனத்தினால் கடந்த 15 வருட காலத்தினுள் செயற்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செயல் திட்டங்களை சிறப்பான வகையில் நிறைவு செய்ததன் ஊடாக மற்றும் அதன் மூலமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி முதலீடுகளின் ஊடாக உழைத்த 18 மில்லியன் ரூபாவை நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக அதாவது, பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தல், மனித வளங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு திறைசேரியிலிருந்து நிதி கிடைக்காததன் காரணமாக பயன்படுத்துதல் வேண்டுமென 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைக்கமைய முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவு

குறித்துக்கொண்டேன்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

(அ) இந்தப் பாடநெறியை 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டிருந்தபோதிலும் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக அந்தச் சிக்கல்களை தீர்த்துக்கொள்ளும் வரை ஆரம்பிப்பதனைத் தாமதிக்க வேண்டியேற்பட்டது.

(ஆ) மூலோபாயத் திட்டம் மற்றும் செயல் திட்டத்தின் முன்னேற்றத்தை சுட்டிக்காட்டும் அறிக்கையொன்றை கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) இலங்கையில் கணனித் தொழில்நுட்பக் கற்கைத் துறையில் விசேடமாக அண்மைய காலகட்டத்தில் நிலவும் கடுமையான போட்டிக்கு முகங்கொடுப்பதற்காக நிறுவனமானது முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

(ஆ) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனமானது கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாகும். அதனால் அதனைக் கையகப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை இல்லை.

4.3 நிதியத்தின் குறை பயன்பாடு

2014, 2015 மற்றும் 2016 ஆகிய மூன்று ஆண்டுகளில் நிறுவனத்தினால் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட நிர்மாணச் செயற் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக அரசாங்கத்தினால் வழங்குவதாக இணக்கம் தெரிவிக்கப்பட்ட நிதியைப் பெற்றுக்கொடுக்காததன் காரணமாக நிறுவனத்தின் நிதி பயன்படுத்தப்பட்டதுடன், அந்த நிதி 2016 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றது.

கடந்த 2016, 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக நிறுவனத்திற்கு கிடைத்த மூலதன நிதி ஏற்பாடுகள் மற்றும் அந்த 3 ஆண்டுகளில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினங்கள் பற்றிய பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

"ரூ. 000"

	2014	2015	2016	மொத்தம்
மூலதன நிதி ஏற்பாடு	15,000	45,000	245,000	305,000
மூலதனச் செலவினம்	133,347	106,270	199,687	439,304
வேறுபாடு	(118,447)	(61,270)	45,313	(134,304)

2015 ஆம் ஆண்டில் எமது நிறுவனத்திற்கு திறைசேரியிடமிருந்து மூலதன நிதி ஏற்பாடாக ரூபா 45 மில்லியன் கிடைக்கப்பெற்றது. ஆனாலும் 2015 ஆம் ஆண்டிற்கான எமது மூலதனச் செலவினம் ரூபா 106 மில்லியனாகும். 2015 இன் இறுதியில் இது தொடர்பாக திறைசேரியுடனான கலந்துரையாடப்பட்டதுடன், அங்கு ஏனைய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி செலுத்துமாறு அறிவிக்கப்பட்டதுடன், அந்தத் தொகையை2016 ஆம் ஆண்டில் எமக்கு பெற்றுத் தருவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் அந்தத் தொகை கிடைக்கப்பெற்றதன் பின்னர் 2015 ஆம் ஆண்டில் தற்காலிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகையை குறிப்பிட்ட அந்த அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டது.

4.4 செயற்பாடற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

அசையாத இருப்புக்கள் சம்பந்தமாக உரிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு களஞ்சியசாலையிலிருந்து ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

4.5 ஆளணி நிர்வாகம்

ஒப்பந்த அடிப்படையில் மற்றும் நாள் சம்பள அடிப்படையில் போன்றே அலுவல் ஒப்படைப்பு அடிப்படையில் இந்த நிறுவனத்தின் நாளாந்த அலுவல்களை மேற்கொள்வதற்காக தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கான 85 வெற்றிடங்களுக்காக 34 பேரை மாத்திரம் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. Zero Cadre Policy இன் கீழ் இந்த நிறுவனத்திற்குத் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கை சம்பந்தமான மீளாய்வின் பின்னர் தேவையான புதிய ஊழியர்களின் எண்ணிக்கைக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. புதிய பதவிகளுக்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

5. <u>கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் நல்லாளுகை</u>

பெறுகைகள் (கொள்வனவு) திட்டமிடல்

2016 பெறுகைகள் (கொள்வனவு) திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட Rehabilitation of Lab Partioning, Labs Management இன் கீழ் கீழ் குறிப்பிடப்படும் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

UCSC/CW/2016/03	Water Proofing Ground Floor	1,477,575/-
UCSC/CW/2016/04	Floor Tiling	1,742,400/-
UCSC/S/NOC/2016/039	WI- FI Access Point	1829,600/-

இது தவிர ஏனைய கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்களுக்கான ஒதுக்கீடுகளின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

6. <u>முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்</u>

(அ)குறித்துக் கொண்டேன்.

(ஆ) குறித்துக் கொண்டேன்.

(இ) குறித்துக் கொண்டேன்.

(ஈ) குறித்துக் கொண்டேன்.

நன்றி

பேராசிரியர் கே.பீ.ஹேவாகமகே
பணிப்பாளர்
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனம்